www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 42 JUNE 2014

இதழ் - 42 ஆனி 2014

# ஆட்சி மாற்றம் என்ற கோசம் நாட்டை பின்னோக்கி இழுத்துச் செல்வதற்கே!



இலங்கையில் ஓர் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதே இப்பொழுது பலரினதும் ஒரே அவாவாக இருக்கின்றது. அதற்கான காரணத்தை ஒரே வாக்கியத்தில் சொல்லிவிட முடியாது. ஆட்சி மாற்றத்தை விரும்புவர்களில் பல விதமான தரப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களது நோக்கங்களிலும் பல விதமான காரணங்கள் இருக்கின்றன.

அதேநேரத்தில், 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்துவிடுமோ' என்ற அச்சமும் அவர்களில் சில தரப்பினர்களுக்கு இருக்கின்றது.

ஏனெனில் ஜனநாயகத்தைக் கொண்டு வருவதற்காக எனச் சொல்லிக் கொண்டு, ஈராக்கிலும், லிபியாவிலும, எகிப்திலும் செய்த ஆட்சிக் கவிழ்ப்புகள் எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தியிருக்கின்றன. அதாவது ஆட்சி மாற்றம் செய்தவர்கள் சொன்ன 'சர்வாதிகார' அரசுகள் அந்த நாடுகளில் போய்விட்டாலும், அதற்குப் பதிலாக மோசமான மத அடிப்படைவாத அரசுகள் அந்த நாடுகளில் தோன்றியுள்ளன. சிரியாவில் ஆசாத்தின் ஆட்சி கவிழ்க்கப்பட்டாலும் அதே மாதிரியான நிலைமைதான் ஏற்படும்.

இலங்கையை எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் பல விதமான சக்திகள் இருக்கின்றன. தேசியவாதிகள், ஜனநாயகவாதிகள், இடதுசாரிகள், இனவாதிகள், பழமைவாதிகள், அடிப்படைவாதிகள் என பல சக்திகள் அதில் இணைந்துள்ளன. ஆனால் தலைமைச் சக்தியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியே இருந்து வருகின்றது. அக்கட்சியில் பலமான ஒரு வலதுசாரிப் பிரிவு எப்போதும் இருந்து வந்த போதும், அதன் தலைமையும், அடிமட்ட சக்திகளும் எப்பொழுதும் ஜனநாயத்தையும், ஏகாதிபத்திய எதிர்ப்பையும் உயர்த்திப் பிடிப்பனவாக இருந்து வந்துள்ளன.

அதன் காரணமாகவே 1956இல் அமைந்த எஸ்.டபிள்யூ.ஆர்.பண்டாரநாயக்கவின் முதலாவது ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசுக்கு இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவு இருந்தது. அதேபோல அவரது மனைவியான சிறீமாவோ பண்டாரநாயக்க 1960இல் ஆட்சி அமைத்தபோதும் இடதுசாரிகளின் ஆதரவு இருந்தது. 1964இல் இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி சிறீமாவோ அரசின் பங்காளியாகியாகவும் மாறியது. 1970இல் அமைந்த சிறீமாவோ தலைமையிலான அரசில் லங்கா சமசமாஜக் கட்சியுடன் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து கொண்டது. இந்தக் காலகட்டங்களில் ஆட்சி செய்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு இடதுசாரிகளுடனான கூட்டணி வலுச் சேர்த்தது என்றால் மிகையாகாது.

1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்த புதிய அரசியல் சாசனத்தால் மக்கள் விரோத, எதேச்சாதிகார நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும், விகிதாசாரப் பிரதிநிதித்துவமும், விருப்பு வாக்கு முறையும் அமுலுக்கு வந்தது. இந்தப் புதிய அரசியல் சாசனம் இரண்டு தீய விளைவுகளை — அதாவது ஜனநாயக விரோதப் போக்கையும், இனவாதப் போக்கையும் தீவிரப்படுத்தியது. அந்த அரசமைப்பு தனியொரு கட்சிக்கு வெற்றி வாய்ப்பைத் தட்டிப் பறித்ததின் காரணமாக உருவானதே சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு. அதிலும் வழமைபோல இடதுசாரிகள் இடம்பெற்றாலும், முதலில் ஜே.வி.பி போன்ற சிங்கள இனவாத சக்தியும், பின்னர் ஹெல உருமய, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

நூறு சிந்தனை மலரட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# இனவாதிகளுக்கு இன்னுமொரு வெற்றி

**ஜூன்** 15ந் திகதி அளுத்கமையில் தொடங்கி தர்காநகர், பேருவளை, தெகிவளை, பதுளை என பல்வேறு நகரங்களில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்த வன்முறையில் நான்கு பேர் கொல்லப்பட்டும் எண்பது பேருக்கு மேல் காயமடைந்தும் பல வீடுகள், கடைகள், வாகனங்கள் தீவைத்து அழிக்கப்பட்டும் உள்ளன. அளுத்கமையில் பௌத்த பிக்கு ஒருவர் தாக்கப்பட்டதின் எதிரொலியாக கலவரம் உருவாகியதாக கூறப்படுகின்ற போதிலும், ஹலாலுக்கு எதிரான கூப்பாடுகள் (ஹலால் சான்றிதழை வழங்குவதற்கு உலமா சபை வருடமொன்றுக்கு 2 இலட்சம் ரூபா அறவிடுவதாக பொதுபல சேனா பிரச்சாரம் செய்து வருகின்றது), பள்ளிவாசல்களுக்கு எதிரான தாக்குதல்கள் போன்றவற்றின் தொடர்ச்சியாகவே இந்த வன்முறைகள் நடந்துள்ளன.

1983 ஆண்டு ஜுலை மாத இனக்கலவரத்தின் பின்னர், அதேமாதிரியான இனக்கலவரமொன்று இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக நிகழக்கூடாது என்பதில் சகல தரப்பினரும் கவனமாக இருந்து வருகிறார்கள் என்றுதான் கூறப்பட்டு வருகின்றது. ஏனெனில் அந்த இனக்கலவரம் உடனடியாகவே தமிழிளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை தீவிரப்படுத்தி, உள்நாட்டு யுத்தமாக மாற்றியது. அளுத்கமை கலவரத்தை வைத்து யுத்தம் ஒன்றை உருவாக்கலாம் என்ற நப்பாசையில் 'மீண்டுமொரு பிரபாகரனை முஸ்லீம்கள் தேடுகிறார்கள்' என புலிகள் சார்பு ஊடகங்கள் கருத்துகள் வெளியிட்டுள்ளன.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் 26 ஆண்டு காலம் (2009 ஆண்டு மே மாதம் வரையில்) நீடித்து, நாட்டினை சின்னா பின்னமாக்கியது. குறைந்தது இன்னுமொரு அரை நூற்றாண்டு காலத்திற்காவது, இந்த யுத்தத்தின் பின்விளைவுகளை நிட்சயமாக இலங்கையில் காணலாம். 1983 ஆண்டு ஜுலை இனக்கலவரத்திற்கும், அதற்கு முன்னர் நிகழ்ந்த இனக்கலவரங்களுக்கும் பின்னணியிலிருந்து தூபமிட்ட இனவாத அரசியல்வாதிகளிலிருந்து, எப்போதும் இலங்கையில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்திற்காக குரல் கொடுப்பவர்கள் வரை, ஒரு விடயத்தினை தெளிவாக உணர்ந்துள்ளனர். அதாவது இனக்கலவரம் ஒன்றினை உருவாக்குவது மிகச்சுலபம், ஆனால் அதன் வடுக்களை ஒரு போதும் களைய முடியாது என்பதே அந்த விடயம்.

வடக்கிலிருந்து முஸ்லீம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதையும், கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் படுகொலைகளையும், அக்காலகட்டங்களில் கண்டிக்க முன்வராத இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளிருந்து, தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் மற்றும் சினிமாக்காரர்கள் வரை, இலங்கையில் முஸ்லீம்கள் கொல்லப்படுவதாக கண்ணீர் அறிக்கைகள் விட்டுள்ளனர். அத்துடன் இம்முறை பிரித்தானியா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலிருந்தும் இலங்கை அரசுக்கு எதிரான கண்டனங்கள் வந்துள்ளன. இவ்வாறான கலவரங்கள், ஏற்கனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் போர்க்குற்ற விசாரணையில் சிக்கியிருக்கும் இலங்கை அரசிற்கு மென்மேலும் நெருக்கடியை தோற்றுவிக்கும்.

அண்மைக்காலமாக பொதுபலசேனா, ராவணா பலய, சிங்கள ராவய , சிஹல உறுமய, சிங்ஹலேயே மகா சம்மத பூமிபுத்ர, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற அமைப்புகள் இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையிலான கருத்துகளை வெளியிட்டு வருகின்றன. இந்த அமைப்புகளுக்கு தற்போதைய ஆளுங்கட்சியிலுள்ள ஒரு சிலரது அரவணைப்பும் இருப்பதாக பரவலாக கூறப்படுகின்றது. ஆனால் இந்த அமைப்பினரின் கருத்துகளை பகிரங்கமாக எதிர்ப்பவர்களும் ஆளுங்கட்சியில் இருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அளுத்கமை கலவரம் பற்றி கருத்து தெரிவித்த அமைச்சர் ராஜித சேனரத்னவிற்கு, 'முஹம்மத் ராஜித' என பட்டம் சூட்டப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போதைய ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இனவாதிகள், இன ஐக்கியவாதிகள், சிறுபான்மை இனத்தவர்கள் என எல்லா தரப்பினரையும் உள்வாங்கி வைத்துள்ளது என்பது சகலருக்கும் தெரிந்த விடயம். இது அதிகாரத்தை தக்கவைப்பதற்கான (வாக்கு வங்கிகளுக்கான) தந்திரோபயமாக கருதப்பட்டு வருகின்றது. ஆனால் தற்போதைய அரசு மிக மோசமான இனவாதங்கொண்டதென தமிழ் தேசியவாதிகளால் உலகந்தழுவி பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இனவாதிகளை கட்டுப்படுத்தி, சகல சிறுபான்மை இனத்தவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஒருபோதும் தவறக்கூடாது.

இன ஐக்கியத்தை வலியுறுத்தி கருத்துக்களை வெளியிடுவதற்கு பதிலாக, இனக்கலவரங்கள் ஏற்பட்டவுடன் கலவரப்பகுதி படங்களுடன் கூடிய கொட்டை எழுத்திலான செய்திகளையும், சேதங்கள் மற்றும் கொல்லப்பட்டவர்கள், காயப்பட்டவர்களின் புள்ளிவிபரங்களையும் வெளியிடுவதிலேயே ஊடகங்கள் போட்டி போடுகின்றன. இந்த செய்திகளில் சிலவேளைகளில் உண்மைகளும் இருப்பதில்லை. இதனாலேயே இனங்களுக்கிடையேயான வன்முறைகள் மேலும் மேலும் அதிகமாக பரவுகின்றன. *

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com


படிப்பகம்

www.padippakam.com



ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சியின் 43ஆவது ஆண்டு நினைவாக ஒரு கண்ணோட்டம்: பகுதி 3

# தமிழ் பகுதிகளில் பொலிசாரின் வேட்டை!

**ஜே**.வி.பி இயக்கம் 1971 ஏப்ரல் 5ஆம் திகதி ஆரம்பித்த கிளர்ச்சி காரணமாக சிங்களப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்பு அளவு தமிழ் பேசும் பகுதிகளில் பெரும் பாதிப்பு ஏற்படவில்லையாயினும், ஒரு குறிப்பிட்ட அளவு அதன் தாக்கம் இருக்கத்தான் செய்தது. குறிப்பாக சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என அந்த நேரத்தில் முதலாளித்துவ ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டு வந்த, நா.சண்முகதாசனை பொதுச் செயலாளராகக் கொண்ட புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு தெற்கில் மட்டுமின்றி வடக்கு கிழக்கிலும் பாதிப்பு இருந்தது. குறிப்பாக வடக்கில் செயற்பட்ட அதன் கட்சி உறுப்பினர்கள் பலர் பாதிப்புக்கு உள்ளாகினர்.

அதற்குக் காரணங்கள் பல இருந்தன.

முதலாவது, அந்தக் கட்சி மட்டும்தான் ரஸ்யா, சீனா, வியட்நாம், கியூபா, வட கொரியா போன்ற நாடுகளில் ஏற்பட்டது போன்று ஆயுதப் போராட்டம் மூலம் மட்டுமே அதிகாரத்தைக் கைப்பற்றி இலங்கையில் சோசலிச அரசொன்றை அமைப்பது பற்றிப் பேசி வந்தது.

இரண்டாவது, அந்தக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற ரோகண விஜேவீர தான் ஜே.வி.பி இயக்கத்தை ஸ்தாபித்து 71 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சியை ஏற்படுத்தியவர் என்றபடியால், புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும் வாய்ப்புக் கிடைத்தால் அவ்வாறான பாதையில் செல்லலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு, குறிப்பாக ஆயுதப்படைகளுக்கு இருந்தது.

மூன்றாவது, இலங்கை கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றிலேயே அந்தக் கட்சிதான் புரட்சிகர வழிமுறைகளைப் பயன்படுத்தி வட பகுதியில் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை நடாத்தியதன் மூலம் அதில் கணிசமான அளவு வெற்றி பெற்று, தனது புரட்சிகர குணாம்சத்தை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வெளிப்படுத்தியிருந்த இரண்டு வருடங்களிலேயே ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி நடைபெற்றிருந்தது. அந்தப் போராட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட பெரும் வாலிபர் அணியொன்று அக்கட்சியிடம் இருந்ததால், ஏதாவது கிளர்ச்சி நடவடிக்கைகளில் அக்கட்சி இறங்கலாம் என்ற எதிர்பார்ப்பு பொலிசாருக்கு இருந்தது.

**சுப்பராஜன்**

நான்காவது, புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை அதன் கிளிநொச்சி கிளை மிகவும் துடிப்புடன் செயற்பட்ட ஒன்றாக இருந்தது. கொழும்பிலிருந்த கட்சித் தலைமை வாயளவில் புரட்சிகர சுலோகங்களை உச்சரித்துக் கொண்டு நடைமுறையில் தொழிற்சங்கவாதத்தில் மூழ்கியிருக்க, கிளிநொச்சி கட்சிக் கிளை ஆரம்பத்தில் தான் செய்து வந்த சீர்திருத்தவாத விவசாய சங்க வேலைகளிலிருந்து கூட விடுபட்டு, புரட்சிகர வழிமுறைகளை கையாளத் தொடங்கியிருந்தது. (அதனால்தான் 1972இல் கட்சியின் பெரும்பான்மை சண்முகதாசனை நிராகரித்து மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய போது. அவர்களுக்கு எதிராக சண்முகதாசன் அடித்து வெளியிட்ட அறிக்கையில் கிளிநொச்சி கட்சி உறுப்பினர்களை ''நக்சலைட்டுகள்'' என வர்ணித்ததுடன், தனது 16 பக்க அறிக்கையில் ஏறத்தாழ 3 பக்கங்களை கிளிநொச்சிப் பகுதிக் கட்சி உறுப்பினர்களை வசை பாடுவதிலேயே செலவழித்திருந்தார்)

கிளிநொச்சி கட்சிக் கிளை அக்கிராயன் பகுதியிலுள்ள கோணாவில் மத்திய தர குடியேற்றத்திட்டக் காணி ஒன்றில் (வயல் 10 ஏக்கர், மேட்டுக்காணி 5 ஏக்கர்) பயிற்சி முகாம் ஒன்றையும் அமைத்திருந்தது. அதுபற்றி 'வீரகேசரி' பத்திரிகையின் சகோதரத் தினசரியான 'மித்திரன்' செய்தியொன்றையும் ஜே.வி.பி கிளர்ச்சிக்கு சில நாட்களுக்கு முன்னர் பிரசுரித்திருந்தது. அதில் அக்கிராயனிலும், வன்னேரிக்குளத்திலும் தீவிரவாதிகள் முகாம் அமைத்திருப்பதுடன், பகலில் விவசாயிகளுடன் சேர்ந்து வயல் வேலைகளில் ஈடுபடுவதாகவும், இரவில் ஆயுதப் பயிற்சி எடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது. இந்தச் செய்தியை அங்கு காணி வைத்திருந்த யாழ்.கொட்டடியைச் சேர்ந்த ஒருவர்தான் வழங்கினார் என்பது பின்னர் தெரிய வந்தது.

ஆனால் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி கிளிநொச்சிக் கிளையின் இந்த முகாம் குறித்து கிளிநொச்சிப் பொலிசாருக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தது. ஏனெனில் 1969இல் டட்லி சேனநாயக்கவை பிரதமராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஏழு கட்சி கூட்டரசாங்கம் (இதில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்தன) தொழிலாளி வர்க்கத்தின் மேதினமும் பௌத்தர்களின் புனித தினமான வெசாக் தினமும் ஒரேநாளில் வருகிறது என்று சொல்லி மேதினத்தை நாடு முழுவதும் தடை செய்திருந்தது.

அந்தத் தடையை மீறி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலம், பொதுக்கூட்டம் என்பன நடாத்துவதற்கு ஏற்பாடு செய்து வந்தது. இதை அவதானித்த யாழ்ப்பாணப் பொலிசார் மேதினத்தன்று காலையில் கட்சியின் யாழ்பாணக் காரியாலயத்தை திடீரென முற்றுகையிட்டு அங்கு இருந்த கட்சியின் வட பிரதேசச் செயலாளர்


படிப்பகம்

www.padippakam.com


வீ.ஏ.கந்தசாமியையும் வேறு இருவரையும் கைது செய்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் வைத்திருப்பதற்குப் பயந்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் கொண்டுபோய் தடுத்து வைத்தனர்.

அவர்களை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரி கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள கட்சியின் பயிற்சி முகாமைக் காட்டும்படி கேட்டிருக்கிறார். அத்துடன் முகாமைத் தேடிப்போவதாகச் சொல்லி அன்றிரவு எங்கெங்கோ போய் சுற்றிவிட்டு வந்து, தாம் போனபோது தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர் எனவும் கதை விட்டிருக்கின்றனர் பொலிசார்.

எனவே 71இல் ஜே.வி.பி கிளர்ச்சி ஆரம்பமானதும், யாழ்ப்பாணத்தில் கட்சியின் முக்கிய தலைவர்களைத் தேடியதுடன், கிளிநொச்சியிலும் கட்சி உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலுடன் பெரும் தேடுதல் வேட்டையில் இறங்கினர் பொலிசார். கிளிநொச்சிப் பொலிசாருக்கு அந்தப் பெயர்ப்பட்டியலைக் கொடுத்தவர் முரசுமோட்டையில் நிறுவனம் ஒன்றை நடாத்தி வந்த ஒரு கிறிஸ்தவ மதகுரு என்பது பின்னர் தெரிய வந்தது. ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் பல கிளிநொச்சிக் குடியேற்றக் கிராமங்கள் போலவே முரசுமோட்டையிலும் பல இளைஞர்கள் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்திருந்தனர். அது அந்த மதகுருவுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர் முரசுமோட்டை இளைஞர்களின் பெயர்கள் உட்பட கிளிநொச்சியில் கட்சி அமைப்பாளர்களாக இருந்த நா.யோகேந்திரநாதன், ச.சுப்பிரமணியம் உட்பட டசின் கணக்கானவர்களின் பெயரை பொலிசாருக்குக் கொடுத்துவிட்டார்.

அதேபோல யாழ்ப்பாணத்தில் கட்சியின் முக்கியஸ்தர்களாக இருந்த வட பிரதேசச் செயலாளர் வீ.ஏ.கந்தசாமி, வாலிப முன்னணித் தலைவர் கே.ஏ.சுப்பிரமணியம், வாலிப முன்னணி இணைச்செயலாளர் சி.கா.செந்திவேல், வட பிரதேசக் குழு உறுப்பினர் எம்.ஏ.சி. இக்பால் (ஜே.வி.பி கிளர்ச்சி நடைபெற்ற நேரம் இக்பால் மன்னார் மாவட்டத்தில் கட்சி அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்) உட்பட பல சாதாரண கட்சி உறுப்பினர்களையும் தேடி பொலிசார் வலை விரித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளராக இருந்த இ.வே.துரைரத்தினம் மற்றும் மாணிக்கம், இராசேந்திரம், மரியதாஸ் போன்றவர்களையும் பொலிசார் தேடி வந்தனர்.



**தோழர் வீ.ஏ.கந்தசாமி**

வவுனியாவில் அமைப்பாளர்களாக இருந்த அ.கௌரிகாந்தன், ச.சுப்பிரமணியம் (ஜே.வி.பி கிளர்ச்சி நடந்த நேரம் மணியம் வவுனியாவில் அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்) உட்பட பலரைப் பொலிசார் தேடி வந்தனர்.

கிழக்கைப் பொறுத்தவரை கட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளராக இருந்த கே.வி.கிருஸ்ணக்குட்டி (இவர் கேரளாவைச் சேர்ந்தவர்) மற்றும் முக்கியமான கட்சி உறுப்பினர்களான கே.தங்கவடிவேல் (கவிஞர் சுபத்திரன்), கே.யோகநாதன் (கவிஞர் சாருமதி), துரைரத்தினம், நேசராசா, சித்தி, ஆனந்தன் போன்றோரையும் பொலிசார் தேடினர்.

ஆனால் இவர்களில் பலர் பொலிசாரிடம் அகப்படாமல் தலைமறைவாகிவிட்டனர். ஜே.வி.பி கிளர்ச்சி நடைபெற்ற போது வட பிரதேச செயலாளர் வீ.ஏ.கந்தசாமி, கிளிநொச்சி அமைப்பாளர்கள் யோகேந்திரநாதன், மணியம் உட்பட ஒருதொகை கட்சி உறுப்பினர்கள் அக்கிராயன் – கோணாவிலிலிருந்த பயிற்சி முகாமில் தங்கி இருந்தனர். அது கிளிநொச்சிப் பொலிசாருக்குத் தெரிந்திருந்தும் அவர்கள் இவர்களைக் கைதுசெய்ய முயற்சிக்கவில்லை.

அந்த நாட்களில் தினசரி கோணாவில் சந்திக்கு ஜீப்பில் வரும் பொலிசார், கம்யூனிஸ்ட்டுகளின் முகாம் இருந்த 70ஆம் இலக்கக் காணியில் அவர்கள் இருக்கிறார்களா என பொதுமக்களிடம் விசாரித்துவிட்டு திரும்பிச் செல்வது வழக்கமாக இருந்தது. முகாமில் இருந்த கட்சி உறுப்பினர்கள் அப்பொழுது தாம் விவசாயம் செய்த வயல்களிலிருந்து நெல் அறுவடை செய்து சூடடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அந்த வேலையை முடித்துக் கொண்டு கிளம்பிச் சென்ற பின்னரே பொலிசார் முகாம் இருந்த காணிகளைச் சென்று பார்வையிட்டதுடன், பொதுமக்களிடம் விசாரணையும் மேற்கொண்டனர்.

அதேநேரத்தில் கிளிநொச்சிப் பொலிசார் முரசுமோட்டைத் தோழர்களைக் கைதுசெய்ய ஒரு தந்திரத்தைக் கையாண்டனர். அப்பொழுது கிளிநொச்சியில் துன்னாலையைச் சேர்ந்த கணேசன் என்பவர் பொலிஸ் இன்ஸ்பெக்டராகவும், நாதன் என்றழைக்கப்படும் சித்தன்கேணியைச் சேர்ந்த கதிர்காமநாதன் என்பவர் உதவி இன்ஸ்பெக்டராகவும் இருந்தனர். (இந்த நாதன் தான் யாழ்.கோட்டை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி தலைவர் ரோகண விஜேவீரவை சிறையை உடைத்து விடுவிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த ஜே.வி.பி உறுப்பினர்கள் அந்த முயற்சி கைகூடாமல் போகவே தென்னிலங்கைக்குத் தப்பியோடுகையில் ஆனையிறவு தடுப்பு முகாமில் அவர்களில் சிலரைச் சுட்டுக் கொன்றவர்)

பொலிசார் முரசுமோட்டையில் கட்சி அமைப்பாளராக இருந்த பா.கணேசபிள்ளையைப் பிடிப்பதற்காக ஒரு துரோகியைத் தயார் செய்தனர். சின்னையா என்ற பெயருடைய அவன் கணேசபிள்ளையுடன் சில நாட்களாக நெருங்கிப் பழகி அவரது நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டான். அந்த நாட்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு இடங்களில் தங்குவது வழமை. அதுபோலவே கணேசபிள்ளையும் ஒரு இரவு முரசுமோட்டையில் ஒரு கட்சி உறுப்பினர் வீட்டில் தங்கியிருந்த நேரம் அந்த சின்னையா என்பவனும் அவருடன் தங்கியுள்ளான்.

அடுத்தநாள் காலை அவர்கள் எழுந்து வேறொரு இடத்துக்குப் புறப்படுகையில் பிரதான வீதியில் பொலிஸ் ஜீப் ஒன்று நிற்பதை அவதானித்த கணேசபிள்ளை, பாதையை மாற்றுவதற்காக முள்ளுக்கம்பி வேலி ஒன்றைக் கடக்க முயன்றிருக்கிறார். அந்த நேரம் பார்த்து பொலிசார் கொடுத்து மறைத்து வைத்திருந்த கிறீஸ் கத்தியை எடுத்த சின்னையா என்ற துரோகி கணேசபிள்ளையின் பழுவில் குத்திவிட்டான். அந்தக் குத்துடனும் கணேசபிள்ளை வயல் வெளிகளினூடாக நீண்ட தூரம் ஓடியிருக்கிறார். அதேநேரம் பொலிஸ் ஜீப்பும் அவரைக் கலைத்திருக்கிறது. இறுதியில் கணேசபிள்ளை களைத்துப்போய் மயங்கி விழுந்த நேரம் பொலிசார் அவரைக்

www.padippakam.com

கைதுசெய்து ஜீப்பில் தூக்கிப்போட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

அதன் பின்னர் முரசுமோட்டையைச் சேர்ந்த கட்சி ஆதரவாளர்களான கிட்டு, தங்கத்துரை உட்படப் பலரைப் பொலிசார் கைது செய்தனர். இவர்கள் எல்லோரும் ஜே.வி.பி தலைவா ரோகண வியேவீரவுடன் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் ஒன்றாக அடைத்து வைக்கப்பட்டனர்.

இதுமாதிரி வட்டக்கச்சி கட்சிப் பொறுப்பாளர் தவலிங்கம் என்பவரைக் கைதுசெய்ய பொலிசார் வேறொரு தந்திரத்தைக் கைக்கொண்டனர். அவரது வட்டக்கச்சி வீட்டில் இரவில் அவர் மட்டுமே தங்குவது வழமை. எனவே பொலிசார் ஓர் இரவு நேரத்துடனேயே அவரது வீட்டுக்குள் புகுந்து அவரைக் கைது செய்வதற்காக இரவு முழுவதும் காத்திருந்தனர். ஆனால் இந்தத் தகவல் தவலிங்கத்துக்கு அயலவர்களால் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டு விட்டதால், அவர் அன்றிரவு தனது வீட்டுக்குப் போகாமல் பொலிசாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டார்.

விசுவமடுவிலும் வாமதேவன் என்ற முக்கிய கட்சி அமைப்பாளரைப் பொலிசார் தேடி வந்தனர். அவரை முன்னரும் ஒருதடவை (இராணுவத்துக்கும் தருமபுர மக்களுக்கும் ஏற்பட்ட மோதல் சம்பவத்தின் போது) அப்போது கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்த சின்னையா தலைமையிலான பொலிஸ் குழு கைது செய்ததாயினும், அப்பொழுது விசுவமடு படித்த வாலிபர் திட்டப் பொறுப்பாளராக இருந்த விவசாய உத்தியோகத்தர் கோமளேஸ்வரன் என்பவரின் முயற்சியால் விடுவிக்கப்பட்டுவிட்டார். அவர் விடுவிக்கப்படாவிட்டால் பொலிஸ் ஜீப் சுண்டிக்குளம் சந்தியைத் தாண்டும் போது அதை மறித்து வாமதேவனை விடுவிக்க விசுவமடு விவசாயிகள் தயாராக இருந்தனர். நல்ல வேளையாக அந்த அசம்பாவிதம் நடக்காமல் பொலிசார் வாமதேவனை விடுவித்துவிட்டனர். (வாமதேவனை பொலிசார் அவரது காணியில் வைத்துக் கைதுசெய்த நேரம் வட பிரதேச கட்சிச் செயலாளர் வீ.ஏ.கந்தசாமியும் வேறு பல முக்கிய கட்சி உறுப்பினர்களும் அவரது வீட்டுக்குள் கூட்டம் ஒன்றை நடாத்திக் கொண்டிருந்தனர். பொலிசார் வீட்டுக்குள் வந்து பார்த்துவிட்டால் விபரீதமாகப் போய்விடும் என்பதால், பொலிசாரைக் கண்டதும் வாமதேவன் தானாகவே வெற்று உடம்புடன் எழுந்து சென்று பொலிசாருடன் சென்றார்)

ஆனால் ஜே.வி.பி கிளர்ச்சியின் போது பொலிசார் தேடியும் வாமதேவன் அகப்படாததால், அவரது காணிக்குப் பக்கத்துக் காணிக்காரரான மண்டைதீவைச் சேர்ந்த சி.தா.முத்துலிங்கம் என்ற கட்சி ஆதரவாளரைக் கைதுசெய்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று சில நாட்கள் வைத்திருந்து அடித்துச் சித்திரவதை செய்துவிட்டுப் பின்னர் விடுதலை செய்தனர். (இவர் பின்னர் கட்சியினால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட யாழ்.புத்தக நிலையத்தில் பணி புரிந்தார். பின்னர் விசுவமடுவில் மனைவியுடன் வாழ்ந்திருந்து இறுதி யுத்த காலத்தில் முள்ளிவாய்க்காலுக்கு இடம் பெயர்ந்திருந்த நேரத்தில் எறிகணை வீச்சுக்காளாகி மரணித்துவிட்டார்)

இதேநேரத்தில் ஜே.வி.பி கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த காமினி யாப்பா (இவரும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சண்முகதாசனால் வெளியேற்றப்பட்டவர் தான்) தலைமையிலான 'கீழைக்காற்று இயக்கம்' என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் (அந்த நேரத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வவுனியா அமைப்பாளராக இருந்த அ.கௌரிகாந்தனும் கீழைக்காற்று இயக்கத்தில் சேர்ந்து விட்டிருந்தார்) அரசாங்கத்திற்கு எதிராக யாழ்.வைத்தியசாலைச் சுவரில் சில சுலோகங்களை எழுதிவிட்டனர். இந்தச் சுலோகங்களை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் எழுதியிருக்க வேண்டும் எனச் சந்தேகித்த பொலிசார், கட்சியின் வட பிரதேசக் குழு உறுப்பினரும், இலங்கை தேசிய ஆசிரிய சங்க (லங்கா குரு சங்கமய) வட பிரதேசச் செயலாளருமான எம்.குராமசாமி உட்பட சிலரைக் கைதுசெய்து அவர்களைத் துன்புறுத்தியதுடன், அவர்களைக் கொண்டு சுண்ணாம்பின் மூலம் அந்தச் சுலோகங்களையும் அழிக்க வைத்தனர்.

அவ்வாறு அவர்கள் அழித்துக் கொண்டிருந்த பொழுது, பொலிஸ்காரன் ஒருவன் தூரிகையைப் பறித்து அதிலிருந்த சுண்ணாம்புக் கலவையை குமாரசாமியின் கண்களுக்குள் வீசிறியதால், அவர் பல நாட்கள் கண்கள் அவிந்து பார்வையில்லாமல் அவதிப்பட நேர்ந்தது.

வட பகுதிக் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் தலைமறைவானாலும், கட்சியை வடக்கில் ஸ்தாபித்த முன்னோடியான மு.கார்த்திகேசன் எங்கும் செல்லாது தனது நாச்சிமார் கோவிலடி வீட்டிலேயே தங்கியிருந்தார். அவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் 30 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகப் பணி புரிந்து வந்ததாலும், யாழ்ப்பாண மக்களின் பெரும் மதிப்பைப் பெற்றவராக இருந்ததாலும், அவரை அணுகுவதற்கு பொலிசார் சஞ்சலப்பட்டனர். அதற்கு இன்னொரு காரணம், அந்த நேரத்தில் யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சராக (சுப்பிரிண்டன்) இருந்த எஸ்.சுந்தரலிங்கம் யாழ்.இந்துக்கல்லூரியில் கார்த்திகேசன் மாஸ்டரிடம் கல்வி கற்றிருந்ததுடன், அவர் மீது பெருத்த மதிப்பும் வைத்திருந்தார். அதனால் சுந்தரலிங்கம் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையில் ஒரு குழுவை கார்த்திகேசனின் வீட்டுக்கு அனுப்பி அவரிடம் ஒரு வாக்குமூலத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அவரை விட்டுவிட்டனர்.

இத்தகைய ஒரு நெருக்கடியான சூழலிலும் கட்சியின் வட பிரதேசக் குழு, கட்சியின் மிக முக்கிய ஆதரவுத் தளங்களில் ஒன்றான மட்டுவிலிலுள்ள மானாவளைக் கிராமத்தில் கூடி அன்றைய நிலவரங்கள் குறித்து ஆராய்ந்தது. அக்கூட்டத்தில் பொலிசாரால் கண்களில் தாக்கப்பட்ட எம்.குமாரசாமி உட்பட தலைமறைவாயிருந்த அனைத்து வட பிரதேசக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அங்கும் கூட கூட்டம் நடந்து கொண்டிருந்த வேளையில் அந்தக் கிராமத்தின் முக்கிய கட்சி உறுப்பினரான கே.சுப்பையா என்பவரைத் தேடி பொலிஸ் வந்ததாயினும், அவரையோ இதர கட்சித் தோழர்களையோ பொதுமக்கள் எவரும் காட்டிக் கொடுக்காமல் பொலிசாரைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

இந்த நேரத்தில் முக்கிய கட்சி உறுப்பினர்கள் சிலர் சில வேடிக்கையான நடவடிக்கைகளிலும் அந்த நேரத்தில் ஈடுபட்டனர். வட பிரதேசச் செயலாளர் வி.ஏ.கந்தசாமிக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்த ஒரு முக்கிய கட்சி உறுப்பினர் ஒருவர் பாதுகாப்புத் தேடி சோவியத் சார்பு கட்சிப் பிரமுகரான வி.பொன்னம்பலத்திடம் போயிருக்கிறார். இதில் வேடிக்கை என்னவென்றால், சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அன்றைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த போதும், ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சியின் போது

www.padippakam.com

அக்கட்சிகளின் சிங்களப்பகுதி உறுப்பினர்களும் பெருமளவில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதனால் வி.பொன்னம்பலம் போன்ற அக்கட்சியின் வட பகுதித் தலைவர்களும் தமக்கு என்ன நடக்குமோ என்ற அச்சத்தில்தான் இருந்து கொண்டிருந்தனர். (இந்தக் கட்டுரையாளர் அந்த நேரத்தில் வவுனியாவிலுள்ள புதுக்குளம் கிராமத்தில் தங்கியிருந்த போது, அருகிலிருந்த சாஸ்திரி கூளாங்களம் கிராமத்தில் வசித்த சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் செ.பத்மநாதன் பொலிசாருக்குப் பயந்து இரவு நேரங்களில் தனது வீட்டில் படுக்காது சற்றுத் தள்ளியிருந்த தனது வயலிலுள்ள குடிலில் படுப்பதை அறிந்திருந்தார்) இப்படியான சூழலில்தான் அந்த கட்சி உறுப்பினர் தனது அரசியல் எதிரியான வி.பொன்னம்பலத்திடம் பாதுகாப்புத் தேடிச் சென்ற அவலமும் நிகழ்ந்திருக்கிறது.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் பொலிசாரின் கைது நடவடிக்கைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் பயந்து அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான எழுத்தாளர் கே.டானியல் பண்ணைக் கடற்கரையில் உல்லாசமாக தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்திருக்கிறார்! பிறகென்ன? அவர் மீன் பிடிப்பதற்கு முன்னர் கொக்கு மீனை 'நாஞ்சுவது' போல டானியலை பொலிசார் நாஞ்சிச் சென்றுவிட்டனர். பின்னர் அவர் பல மாதங்கள் கழித்து முரசுமோட்டைத் தோழர்கள் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட நேரம்தான் அவரும் வெளியே வந்தார். (இதற்கு முன்னரும் டானியல் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் நடந்தது. 'மீனவனின் பாதணிகள்' என்ற சீன விரோத சினிமாப்படம் ஒன்று யாழ்.றீகல் பட மாளிகையில் திரையிடப்பட்டது. அதைத் திரையிட வேண்டாம் என புரட்சிகர சக்திகள் திரை உரிமையாளரிடம் கேட்டுக்கொண்டும், அவர் பிடிவாதமாக அதைத் திரையிடப்பட்டார். எனவே இளைஞர்கள் சிலர் அத்திரைப்படம் திரையிடப்பட்டுக் கொண்டிருந்த நேரம் திரையரங்கு மீது கைக்குண்டு ஒன்றை வீசினர். அதனால் அப்படம் திரையிடுவது நிறுத்தப்பட்டது. அன்றும் இப்படியான ஒரு சம்பவம் நடக்கப் போகிறது என்று தெரிந்திருந்தும், டானியல் அந்த நேரம் அத்திரைப்படத்தைப் பார்ப்பதற்குச் சென்று, பின்னர் பொலிசார் வந்தபோது ஒருவாறு அவர்களின் கண்களில் படாது தப்பி வந்துவிட்டார்)

இவ்வளவு நடந்திருந்தாலும், தென்னிலங்கையில் செய்தது போல பொலிசார் தமிழ் பகுதிகளில் தாம் கைது செய்த கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எவரையும் கொலை செய்யவில்லை. ஆனால் சித்திரவதை செய்தார்கள். அதற்கு ஒரு காரணம், இவர்கள் யாருமே ஜே.வி.பி உறுப்பினர்கள் இல்லை என்பதும், அவர்களது கிளர்ச்சிக்கும் இவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதும் பொலிசாருக்கு நன்றாகத் தெரிந்திருந்ததுதான். இருந்தாலும் புரட்சிகர செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்த வட பகுதிக் கம்யூனிஸ்ட்டுகளை அச்சுறுத்துவதற்கு பொலிசார் இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால் பொலிசார் தேடிய பலர் அந்த நேரத்தில் தற்செயலாகப் பொலிசாரிடம் சிக்கியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் இந்தச் சம்பவங்கள் எல்லாம் முடிந்த பல நாட்களின் பின்னர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரி இராமநாதன் என்பவர், யோகேந்திரநாதன், மணியம் இருவரையும் ஒருமித்துக் கண்ட பொழுது, 'ஒருமுறை தப்பீட்டீயள். இனிமேலும் கவனமாக இருந்து கொள்ளுங்கோ' என எச்சரித்துவிட்டுச் சென்றார். (அந்த நேரத்தில் யோகேந்திரநாதன் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகி, அமைச்சர் செல்லையா குமாரசூரியர் தலைமையிலான கிளிநொச்சி மாவட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால்தான் சி.ஐ.டி இராமநாதன் அடக்கி வாசித்தாரோ என்னவோ?)

*(அடுத்து வரும் 'வானவில்' ஆடி மாத இதழில், அடக்குமுறையிலிருந்து மீண்டெழுந்த ஜே.வி.பி, அதன் பின்னரும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையில் என்ன கொள்கையைப் பின்பற்றி வருகிறது எனப் பார்ப்போம்)* *

---

***ஒரு சமுதாயத்தில் கலை அடைந்திருக்கிற உச்சத்தை, அந்த சமூகத்தின் பொருளியல் காரணிகளிலிருந்து விளக்க முடியாது.***

**- மார்க்ஸ்**

# das kapital

# வீழும் மூலதனமும் வாழும் மூலதனமும்!


**கா**ர்ல் மாக்ஸ் தனது பிரசித்தி பெற்ற 'மூலதனம்' (Das Kapital) நூலை 1867இல் ஜேர்மன் மொழியில் வெளியிட்ட போது, 1000 பிரதிகள் விற்பதற்கு 5 வருடங்கள் எடுத்தது. இந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு இரண்டு தசாப்தங்களுக்குப் (20 ஆண்டுகள்) பின்னரே வெளியானது.

ஆனால் சமீபத்திய ஆண்டுகளில் மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டு, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சம்பளக் குறைப்பு, சமூக நலத்திட்டங்கள் வெட்டு என பிரளயம் ஏற்பட்ட போது, ஜேர்மன் வெளியீட்டு நிறுவனம் ஒன்று மார்க்சின் மூலதனம் உட்பட பல நூல்களை மறுபிரசுரம் செய்தது. அப்பொழுது சொற்ப நாட்களுக்குள் மார்க்சில் நூல்கள் பல்லாயிரம் பிரதிகள் விற்றுத் தீர்த்தன.

மார்க்சின் நூலை அதிகமாக வாங்கி வாசித்தவர்கள் முதலாளித்துவ 'பொருளாதார மேதைகள்'தான்! காரணம் வேறொன்றும் அல்ல. தற்போதைய முதலாளித்துவ நெருக்கடி குறித்து மார்க்ஸ் அப்போதே ஏதாவது சொல்லியிருக்கிறாரா என்பதை அறிவதும், தாங்கள் எங்கே பிழை விட்டோம் என்பதைக் கண்டு பிடிப்பதும்தான் நோக்கம். மார்க்சியம் அழிந்துவிட்டது என்று சொன்னவர்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கிறது.

மார்க்ஸ் தமது மூலதனம் நூலை எழுதி 147 ஆண்டுகளுக்குப் பின்னர் உண்மையான மூலதனக்காரர்களுக்கு (Capitalists) அடி விழும் போது, மறுபக்கத்தில் மார்க்சின் மூலதனத்தின் (Das Kapital) மதிப்பு உயர்ந்திருக்கிறது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. *

# சீனாவின் பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு!




சீனாவின் பாராளுமன்றமான தேசிய மக்கள் காங்கிரசிஸ் மார்ச் முதல் வாரத்தில் தனது வருடாந்த அமர்வை நடாத்திய முதல் நாளன்று 2014ஆம் ஆண்டுக்கான தனது பாதுகாப்புச் செலவீனமாக 132 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. இத்தொகை கடந்த ஆண்டு (2013) ஒதுக்கப்பட்டதை விட 12.2 வீதம் அதிகமானதென உத்தியோக பூர்வமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் சீன விவகாரங்களை அவதானித்துவரும் மேற்கத்தைய பாதுகாப்பு ஆய்வாளர்கள் சீனா அறிவித்ததைவிட இத்தொகை கூடுதலானது - அதாவது கடந்தாண்டை விட 40 வீதம்வரை அதிகமானது எனக் கூறியுள்ளனர்.

சீனா தனது முப்படைகளையும் மேலும் நவீனமயப்படுத்தவே பாதுகாப்புச் செலவீனத்தை அதிகரித்துள்ளது என நம்பப்படுகிறது.

சீனா இப்பொழுது பெரும்பாலான சுடுகலங்களையும், டாங்கிகளையும், போர் விமானங்களையும், போர்க் கப்பல்களையும் உள்நாட்டிலேயே தயாரிப்பதுடன், அவற்றை மிக நவீன தொழில்நுட்பங்களுடன் தரமுயர்த்தியும் வருகின்றது. அத்துடன் தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் துல்லியமாகச் சென்று தாக்குதல் நடாத்தக் கூடிய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும் (Ballistic Missiles) அது தயாரித்துள்ளது. சீனாவின் இந்த வளர்ச்சி அமெரிக்காவினதும், மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கி உள்ளதாக அந்நாடுகள் கருதுகின்றன.

குறிப்பாக DF-21D என அழைக்கப்படும் கப்பல்களைத் தாக்கி அழிக்கும் சீனாவின் ஏவுகணை (Ani-Ship Ballistic Missiles) அமெரிக்கக் கடற்படைக் கலங்களுக்கு கடுமையான அச்சுறுத்தலானவை என பாதுகாப்பு நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் சீனாவிடம் சொந்தத் தயாரிப்பான 190 பெரிய போர்க்கப்பல்கள் உள்ளன. தற்போது அவை அமெரிக்காவிடம் இருப்பவற்றைவிடக் குறைவாக இருப்பினும், 2020இல் அவை அமெரிக்கத் தொகையை விஞ்சிவிடும் எனக் கூறப்படுகிறது. அதேபோல தற்பொழுது அமெரிக்காவிடம் 11 விமானம்தாங்கிக் கப்பல்களும், சீனாவிடம் ஒன்றிரண்டும் இருப்பினும், எதிர்காலத்தில் அவற்றின் தொகையையும் சீனா அதிகரித்துவிடும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

அத்துடன் இராணுவக் கட்டமைப்பிலும் சீனா சில மாற்றங்களைச் செய்து வருகின்றது. குறிப்பாக மேற்கத்தையப் பாணியில் தனது முப்படைகளையும் ஒன்றிணைக்கும் கூட்டுக் கட்டளைப்பீடம் (Joint Command) ஒன்றையும் நிறுவுவதற்கு அது தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சீனா தனது படைகளைப் பெருமளவில் நவீனமயப்படுத்தினாலும், டெங்சியாவோபிங் காலத்தில் வியட்நாமுடன் ஒரு போரில்

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க..

www.padippakam.com

# யாழ்ப்பாண குடாநாட்டுக் குடிநீர்ப் பிரச்சனை சம்பந்தமாக வாதப்பிரதிவாதங்கள்

இரணைமடு குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்கு வழங்குவது குறித்தும், யாழ்.குடா நாட்டின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்தும், தமிழ் அரசியல் கட்சிகள், புத்திஜீவிகள், அரசாங்க அதிகாரிகள் மத்தியில் தொடர்ந்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பிரச்சினை குறித்து திருவையூரான் என்பவர் எழுதிய கட்டுரை ஒன்றை எமது 'வானவில்' பத்திரிகையும் தனது 2014 சித்திரை இதழில் பிரசுரித்திருந்தது. அந்தக் கட்டுரை சம்பந்தமாக சில பிரதிபலிப்புகளையும் காண முடிந்தது.

அந்தக் கட்டுரையை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரி ஒன்று முழுமையாக மறுபிரசுரம் செய்திருந்தது. பத்தி எழுத்தாளர் ஒருவர் அந்தக் கட்டுரை சம்பந்தமாக தமிழ் வாசகர்களை அதிகமாகக் கொண்ட இணையத்தளம் ஒன்றிலும் எழுதியிருந்தார். தவிர கிளிநொச்சிப் பகுதியிலிருந்து இரண்டொருவர் நேரடியாக வானவில் ஆசிரிய குழுவினருடன் தொடர்பு கொண்டு, அந்தக் கட்டுரை சம்பந்தமான தமது கருத்துகளையும் தெரிவித்தனர். இவர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகள்.

அதன்பின்னர் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான திரு.டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சிக்கு விஜயம் செய்து இந்தப் பிரச்சினை குறித்து பொதுமக்களுடனும், அரச அதிகாரிகளுடனும் ஆராய்ந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் அவரது சக பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும், கிளிநொச்சி மாவட்ட மக்களின் நலனுக்காக அயராது பாடுபடுபவருமான திரு.மு.சந்திரகுமார் ஆற்றிய உரையைக் கீழே தந்திருக்கிறோம். அவர் தனது உரையில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் தண்ணீர் (குடிதண்ணீர் உட்பட) பிரச்சினையை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

இதுதவிர, யாழ்.பல்கலைக்கழக ஓய்வுபெற்ற புவியியல் பேராசிரியர் திரு.இ.சிவச்சந்திரன் அவர்களைப் பணிப்பாளராகக் கொண்ட சிந்தனைக்கூடம் என்ற அமைப்பு இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு கலந்துரையாடலை நடாத்தி தமது கருத்துக்களை ஒரு அறிக்கையாக வெளியிட்டுள்ளனது. அந்த அறிக்கையும் கீழே தரப்பட்டுள்ளது. அதில் அவரது அமைப்பு முன்வைத்துள்ள, யாழ்.குடாநாட்டு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இரணைமடுத் தண்ணீரைக் கொண்டு வருவதுடன் நின்றுவிடாது, யாழ்.குடாநாட்டின் தரைக்கீழ் நன்னீர் மட்டத்தை உயர்த்த வேண்டும் என்ற கருத்து ஆழமான சிந்தனைக்குரியது.

இதுதவிர, கொழும்பில் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அவர்கள் யாழ்.குடாநாட்டின் குடிநீர்ப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு மாநாட்டைக் கூட்டியிருந்தார். அதில் ஈ.பி.டி.பி கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பனவற்றின் பிரதிநிதிகளும், துறைசார்ந்த அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். அதில் யாழ்.கடலேரி நீரை சுத்திகரித்து யாழ்.குடாநாட்டுக்குக் குடிநீராக வழங்குவது பற்றியும் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டு குடிநீர்ப் பிரச்சினையும், அதைத் தீர்க்க இரணைமடு குளத்து நீரை அங்கு கொண்டு போவது பற்றியும் விவாதங்கள் சூடுபிடித்துள்ளன. இந்த விவகாரம் குறித்து வாசகர்கள் எழுதும் எந்தக் கருத்துகளையும் 'வானவில்' பக்கச்சார்பின்றியும், கூட்டிக் குறைத்தல் இன்றியும் பிரசுரிக்கத் தயாராக உள்ளது. எனவே வாசகர்களே! உங்கள் கருத்தை தயக்கமின்றி எமக்கு அனுப்பி வையுங்கள்.

**'வானவில்' ஆசிரிய குழு**

# இரணைமடு குள நீர் விநியோகம் சம்பந்தமாக ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்களின் கருத்து

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயம் மற்றும் குடிநீர் ஆகியவற்றுக்காக நீரைப்பெறும் மார்க்கமாக அமைந்துள்ள இரணைமடுக் குளம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இவ்விடயத்தில் அனைவரும் பொறுப்புணர்வுடனும் அக்கறையுடனும் செயற்படவேண்டும் என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேச சந்திரகுமார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற இரணைமடு - யாழ் குடிநீர் விநியோகத்திட்டம் தொடர்பில் விவசாயிகளுடன் மேற்கொள்ளப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் விசேட கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்.

நீருக்காக மிக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்ற நிலையிலேயே நாம் இரணைமடு நீர் விநியோகத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். இந்நிலையில் குடிநீரே மக்களின் உயிர் வாழ்வைத் தீர்மாணிக்கின்றது என்ற வகையில் அது தொடர்பில் அதிக கரிசனை செலுத்த வேண்டியவர்களாகவே அனைவரும் உள்ளனர்.

இன்று கிளிநொச்சி மாவட்ட மக்களே


படிப்பகம்

www.padippakam.com

குடிநீரின்றி தவித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே குடிநீர் தேவைக்கு அடுத்த படியாகவே விவசாயம் தொடர்பில் சிந்திக்கவேண்டிய அளவுக்கு அதி உச்ச வரட்சி நிலையினை எமது மாவட்டம் எட்டியுள்ளது. அதனடிப்படையில் இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கூட இவ்வருடம்750 ஏக்கராக மட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றது.

ஆகவே நாம் அனைவரும் இரணைமடுத் திட்டம் தொடர்பில் ஆலோசனை நடாத்துகின்ற சந்தர்ப்பங்களில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் நீர்த் தேவைகள் முன்னிலைப் படுத்தப்படவேண்டும் என்பதிலும் இம்மாவட்ட மக்களின் தேவைகள் முதலில் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதிலும் அதிக அக்கறைகொண்டுள்ளோம். ஏனெனில் இன்று யாழ்மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு அரசாங்கம் மாற்றுவழிகளை இனம் கண்டுள்ளதோடு அதனை செயற்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணக்கப்பாடும் கண்டுள்ளது.

ஆனால் இன்று யாழ் தீவகப்பகுதியைவிடவும் கிளிநொச்சிமாவட்டத்தின் பூநகரி பிரதேச மக்கள் அதிகளவான குடிநீர் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். அப்பகுதிக்கு பிரதேச செயலகத்தினால் சுமார் 26 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலிருந்து பௌசர்கள் மூலம் குடிநீர் கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப் படுகின்றது. இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் குடிநீர் விநியோகத்திற்காக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐந்துமில்லியன் ரூபா நிதியும் முடிவடையும் தருவாயை எட்டியுள்ளது எனக் குறிப்பிட்ட அவர்,

கிளிநொச்சி மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சினைகூட இரணைமடுக் குளத்திலேயே தங்கியுள்ளது. அதாவது கிளிநொச்சி நகரை அண்டிய 40 ஆயிரம் வரையான குடும்பங்களுக்கான குடிநீர் விநியோகத் திட்டம் 1800 மில்லியன் ரூபா செலவில் அக் குளத்தை மையமாகக் கொண்டே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. விவசாயிகளைப் போன்று குடிநீருக்காகவும் இம்மாவட்ட மக்கள் இரணைமடுக் குளத்தை நம்பியிருக்கின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத்தை மேம்படுத்தவதற்காக பல பாரிய திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவேண்டியுள்ளது. புதுமுறிப்புக்குளத்தின் கீழான நீர் வநியோக கால்வாய்கள் புனரமைக்கப்பட வேண்டும். அத்தோடு அக்கராயன் குளத்தின் கீழ் பல ஏக்கர் நெற்காணிகள் கால்வாய்கள் சீரின்றி பயிரிடப்படாதிருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் அப்பால் மானாவாரிப் பயிர்செய்கையை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் பூநகரி பிரதேச மக்களுக்கும் மாற்றுவழிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவற்றுக்கெல்லாம் நிதிவளங்களை பெறுவதற்காக அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ள நிலையில் அம்மக்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றார்கள். ஆகவே அரசாங்கம் கடனாகப் பெற்று இப்பகுதிகளில் நடைமுறைப்படுத்த முன்னரும் செயற்திட்டங்களை சீராக முன்னெடுப்பதற்கான அனைத்து சாதகமான சூழல் இங்கு நிலவவேண்டும்.

ஏனெனில் வடக்குமாகாணமே எதிர்கால மேம்பாட்டுக்காக பாரிய நிதிவளங்களை எதிர்பார்த்து காத்திருக்கின்றது எனவும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள்,

இரணைமடுக்குளம் புனரமைக்கப்பட வேண்டும் என்பது அனைவரினதும் வேண்டுகோளாக உள்ளது.. கடந்த காலங்களில் அக்குளத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை அனைவரும் அவதானித்துள்ளனர். எனவே குளம் புனரமைப்பது தடைப்படுமானால் மாவட்ட மக்கள் அனைவரினதும் நிலை கவலைக்கிடமாகும். ஆகவே இன்று ஏற்பட்டுள்ள சூழலை பயன்படுத்தி குளத்தின் புனரமைப்பு தொடர்பில் அனைவும் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# யாழ்ப்பாண குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக
## சிந்தனைக்கூடம் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அறிக்கை

**– இரா.சிவச்சந்திரன் (ஓய்வுநிலைப் பேராசிரியர்), பணிப்பாளர், சிந்தனைக்கூடம்**

அண்மைக் காலத்தில் யாழப்பாணத்து மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை பற்றிப் பல்வேறு கருத்துக்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவற்றினை தொகுத்து பின்வரும் முக்கிய விடயங்களை வரிசைப்படுத்தலாம்.

- யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் பல்வேறு காரணிகளால் குடிநீர் பயன்பாட்டிற்கு உகந்ததற்றதாகி வருகின்றது.
- யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீரை மீளப்புதுப்பிப்பதற்குப் பல்பக்க அடிப்படையிலான பல நடவடிக்கைகள் பலவற்றை செயற்படுத்த வேண்டும்.
- ஒரு உடனடி உபாயமாக யாழ்ப்பாணப் பகுதியில் கிடைக்கக் கூடிய மழை நீரை உரிய முறையில் சேகரித்து நிலத்தடி நீரை மீண்டும் சுத்தமான குடிநீராக மாற்றுவது என முன்மொழியப்பட்டுள்ளது.
- இன்னொரு மாற்று உத்தியாக இரணைமடுக் குளத்தில் இருந்து ஒரு பகுதி நீரை தென்மராட்சி ஊடாக யாழ்ப்பாணத்திற்கும் தீவுப் பகுதிக்கும் கொண்டு செல்வது என்றதிட்டச் செயற்பாடகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டிய விபரங்கள் போதியளவாக இன்னும் முன்வைக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்து நிலத்தடி நீர் பெருமளவில் பாதிப்படைவதற்குக் கடல் நீர் உட்புகுதல் , கடல் நீர் தடுப்பு முறைகள் பராமரிக்கப்படாமல் விட்டமை, அதிகளவு விவசாய உர உபயோகம், கட்டுப்பாடற்ற முறையில் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்தமை, கட்டுப்பாடற்ற வகையில் கிணறுகளையும் ஆழ்கிணறுகளையும் தோண்டியமை , பாதுகாப்பற்ற மலசலகூட முறைமைகளால் கழிவுகள் நிலத்தடி நீருடன் சேர்கின்றமை, நகர்ப்புறங்களில் மலசலகூடக் கழிவுகள் அகற்றும் முறைமை முறையாக இல்லாமை போன்றவற்றினைக் கூறலாம். இக் காரணிகள் கடந்த 50 வருட காலத்தில் ஒன்று திரட்டிய வகையில் ஏற்படுத்திய தாக்கமே இன்றைய யாழ்ப்பாணக் குடிநீர்ப் பிரச்சினையாகும். இதை விட சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலையத்தில் கழிவு எண்ணைக் கசிவினால் ஏற்பட்ட பாதிப்பின் விஸ்தீரணம் இன்னும் உரிய முறையில் மதிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணக் குடிநீருக்கான ஒரு பாரிய திட்டம் மிகவும் அவசரமானது என்ற விடயம் தற்போதைய நிர்வாக கட்டமைப்பினால் போதியளவிற்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை. பொதுமக்கள் மத்தியில் ஏனோதானோ என்ற மனப்பான்மையும் இது வேறு யாருடையதோ பிரச்சினை என்ற மாதிரியான எண்ணமும் மிக உயர்வான அளவில் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் தனிப்பட்ட எதிர்கால அரசியலை உள்நோக்காக வைத்து அறிவு பூர்வமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்து வேண்டாத உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி , அதன் வழி கிளிநொச்சி – யாழ்ப்பாணம் குடிநீர்த்திட்டத்தினை முடக்கிவிட நினைக்கும் அரசியல்வாதிகளும் அறிவுபூர்வமான தகவல்கள் இருந்தும் அவற்றினை ஆரோக்கியமான வகையில் பொதுமக்கள் மத்தியில் கொண்டுசெல்வது மக்கள் கருத்துருவாக்கத்திற்கு உதவ முன்வராத நேர்மையற்ற புத்திஜீவிகளுமே என்பது வெளிபடை காரணமாக இருக்கின்றனர். எல்லா அழிவுகளுக்கும் பின்னர் வழக்கம் போல எமக்கு இது இப்படி என்று தெரியாதே என பொதுமக்கள் அங்கலாய்ப்பர் என்பது திண்ணம்



பொதுமக்கள் முன் மறைக்கப்பட்டுள்ள சில முக்கியமான விடயங்களை இங்கு குறிப்பிடுகின்றோம். கட்டுப்பாடற்ற விவசாய முறையினால் அதாவது ஆயிரக்கணக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொண்டு தொடர்ந்து நீரை ஐம்பது வருட காலங்களுக்கு மேலாக வெளியே இறைத்தமையால் ஆயிரக்கணக்கான வருடங்களாக இயற்கையினால் உருவாக்கப்பட்டிருந்த நன்னீர் வில்லைகளில் இருந்த நீரின் தரம் உவர் தன்மையடைய ஆரம்பித்ததோடு நீரின் அளவும் குறையத் தொடங்கியது.

கட்டுபாடற்ற உர இரசாயனநாசினிகளின் உபயோகத்தின் காரணமாக நைத்திரேற்றுக்களின் அளவு பெருமளவு நிலத்தடி நீருடன் கலக்க நேர்ந்ததால் குடாநாட்டில் இன்றுவரை உள்ள நிலத்தடி நீர் நுகர்வுக்குரியதற்றதாக மாறியது. இதன் அளவு பத்து ஆண்டுகளுக்கு முன்னரேயே உலக சுகாதார நிறுவனத்தின் நியமங்களைவிட குறையத்தொடங்கி இருந்தது. அதே போல தரக்கட்டுப்பாடில்லாத மலசல கூடங்களின் பெருக்கம் காரணமாக நிலத்தடிநீருடன் மலக்கழிவுக்கிருமிகள் கலக்க ஆரம்பித்தன. இதன் வேகத்தைக் குறைப்பதற்கு மலசலக் கழிவுகளை அகற்றுவதற்கான வடிகால் அமைப்புத்திட்டம் ஒன்றுகூட குடாநாட்டில் இல்லை. இவற்றின் தாக்கமாக யாழ்குடாநாடு இலங்கையின் புற்றுநோய் உற்பத்தியில் அதிக வளர்ச்சி வீதத்தைக் கொண்டதாகவும் சிறுநீரகப் பாதிப்பை அதிகமாகக் கொண்ட பிரதேசமாகவும் நெருப்புக்காய்ச்சல் நோயாளிகளை உருவாக்குவதில் முதலிடம் வகிக்கும் மாவட்டமாகவும் மாறியுள்ளது.

இவை பற்றிய தகவல்கள் அறிவு பூர்வமாக புத்திஜீவிகளால் முன்வைக்கப்படாமையால் யாழ் குடாநாட்டில் கிடைக்கும் குடிநீர் உண்மையில் மாசடையவில்லை இது வெறும் புரளி என்ற கருத்தைக் கூட சிலர் துணிந்து முன்வைக்கின்றார்கள். விவசாயத் துறைக்கு ஈடாக மக்களது பொருளாதார , வாழ்வாதார தேவைகளுக்கு வழிவகைகளை முன்வைக்க வேண்டும் என்பதும் விவசாயத்தின் பேண்தகு அளவு மட்டத்தினை நிர்ணயித்துக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்பதும் இங்கு பேசப்படவேயில்லை. நிலத்தடி நீர் முகாமை பற்றிப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் போதாது. நீர் இறைக்கும் இயந்திரங்களையும், நீர் வெளியேறும் அளவினையும் கட்டுப்படுத்துவதற்கு உபவிதிகளோ, முகாமையாளர்களோ , முறைமைகளோ இல்லை. நீர் இறைக்கும் இயந்திரங்களை விவசாய தேவைக்கு எவ்வளவு உபயோகிப்பது, நிலக்கீழ் நீரை உறிஞ்சுவது தடுக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் ஏதாவது குடாநாட்டில் உண்டா? என்பனபோன்ற ஆய்வுப்பெறுபேறுகளும் வெளியிடப்படவில்லை என எந்த ஒரு பிரதேசமும் வரையறுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தினுடைய நிலக்கீழ் நீர் அமைப்பு தோன்றி வளர்வதற்கு ஆயிரக்கணக்கான வருடங்கள் எடுத்தன என்பதும் இது


படிப்பகம்

www.padippakam.com

இயற்கைச் சக்திகளினால் உருவாகிய ஒரு சமநிலையில் தங்கியிருந்தது என்பதும் கடந்த நூற்றாண்டில் குறுகிய ஒரு ஐம்பது வருட , அறுபது வருட காலத்தினுள்ளேயே இதற்குப் பாதிப்பு ஏற்பட்டது என்பதும் யதார்த்தமாகும். நுணுக்கமான இந்த முறையினை இயற்கையாகக் கிடைக்கும் மழையினைக் கொண்டு மீளப்புதுப்பிப்பதற்கு மீண்டும் எத்தனை வருட காலங்கள் தேவைப்படும். நிலக்கீழ் அமைப்புகள் முழுவதும் மழைநீரினால் மீண்டும் கழுவப்பட்டாலேயே இது சாத்தியமாகும். வேறு குறுக்கு வழிகள் இதற்கு இல்லை. இதற்கு ஆகக் குறைந்தது மிகக் கடுமையான கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டு வந்தாலும் கூட ஐம்பது தொடக்கம் நூறு வருட காலங்களாவது தேவைப்படும். அது வரை நீரை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுகின்ற தாக்கங்கள் குறைந்து செல்வதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை.

யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் நிலமேற்பரப்பு நீரினைக் கொண்டு வரும் திட்டங்களின் மூலமே குறுகிய காலத்தில் தீர்த்துக் கொள்ள முடியும். இந்த யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டே ஆக வேண்டும். இதன் காரணமாகவே பல்வேறு முன் யோசனைகளின் பின்னர் வடமாகாணத்தினுள் மழை மூலம் கிடைக்கின்ற நீரினை புத்தி பூர்வமாகக் குறுகிய காலத்தில் முகாமை செய்து யாழ்ப்பாணக் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அரசியல் காரணங்களுக்காக வெளிப்படையாகக் கூற முடியாத பிரச்சினைகளும் இதன் மூலம் தவிர்க்கக்கூடியதாக இருக்கும். இரணைமடுவில் இருந்து நீர் எடுக்க முடியாது என்ற எதிர்ப்புக் கோசத்தைக் கிளப்பியதன் மூலம் அரசாங்கம் மொறகஹகந்த திட்டத்தினை அங்கீகரித்து அதன் மூலம் மகாவலி நீரினைக் கொண்டு வருவதாகத் தீர்மானித்துள்ளதாக தெரிகிறது.

இதன் தார்ப்பரியமும் தாக்கங்களும் மிக இலகுவாக ஊகிக்கக் கூடியனவாகும். சர்வதேச நிதி வழங்கல் நிறுவனங்களின் நெருக்கடிகள், மாறிவரும் கொள்கைகள், இலங்கை தன்னை தான் ஒரு நடுத்தர வருமானத்தைப் பெறும் நாடு என பிரகடனம் செய்தமையால் சலுகை அடிப்படையிலான பெறுகைகளுக்குத் தகைமை இழந்தமை, பல்பக்க நிதிநிறுவனங்களின் முன்னுரிமைகள் போன்ற பல்வேறு நெழிவுசுழிவுகளுடாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளுக்குப் பெருமளவில் தீர்வு வழங்குகின்ற அதே நேரம் நீர்ப்பாசன முறைமைகளை அபிவிருத்தி செய்தல், கிளிநொச்சி பூநகரி தீவுப்பகுதி உட்பட நீண்ட பிரதேசத்திற்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் யாழ்நகருக்கான திண்ம கழிவகற்றும் வடிகாலமைப்பு முறைமையொன்றை நிறுவுதல் போன்ற பல்வேறு முக்கியமான அம்சங்களையும் ஒன்று திரட்டி மிகப் பெரியதொரு முதலீட்டுத் திட்டத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கி நிபுணர்கள் வடிவமைத்துத் தந்தார்கள்.

மக்கள் மிகவும் புத்திபூர்வமாக வகுக்கப்பட்ட அத் திட்டத்தினை வெறுமனே உணர்ச்சிகளின் அடிப்படையில் நிராகரித்தால் அது யாழ்ப்பாணத்துப் புத்திஜீவிகளின் தோல்வியாகவே கருதப்படவேண்டிவரும். எனவே தயவு செய்து இத்திட்டத்தினை மாகாணசபை அவசரப்பட்டு நிராகரித்திருந்த போதும் பல்வேறு மட்டங்களுடனும் தொடர்பு கொண்டு உடனடியாக அதனை அமுல்நடாத்துவதற்கு முயற்சிகளைச் செய்யுமாறு எதிர்கால சந்ததியின் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றோம். யாழ்ப்பாணச் சமூகம் பேண்தகு சமூகமாக நீண்ட பாரம்பரிய நாகரிகத்தைத் தொடர்ந்தும் பேணும் சமூகமாக நிலைபெற நாம் வழிசமைத்துக் கொடுத்தல் வேண்டும். மக்களும், சமூக நிறுவன அமைப்புகளும் தொடர்ந்து குரல்கொடுத்து எமது எதிர்காலத்தைக் காப்போமாக.

*

7ம் பக்கத்தொடர்ச்சி…

ஈடுபட்ட பின்னர் கடந்த கால்நூற்றாண்டாக அது எந்தவொரு போரிலும் ஈடுபடாத காரணத்தால், அதன் போரிடும் ஆற்றல் எத்தகைய வலிமையானது என்பதைத் தீர்மானிக்க முடியாதுள்ளதாகச் சில மேற்கத்தைய பாதுகாப்புக் கொள்கை வகுப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சீனாவின் தொடர்ச்சியான பாதுகாப்புச் செலவீன அதிகரிப்பைத் தொடர்ந்து, சீனாவுடன் அதன் கடல் எல்லைகளில் பிரச்சினைகளைக் கொண்டிருக்கும் அமெரிக்கரின் நேசநாடுகளான யப்பான், தென்கொரியா, தய்வான், பிலிப்பைன்ஸ் என்பனவும் தமது பாதுகாப்புச் செலவீனங்களை அமெரிக்காவின் உதவியுடன் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.




சீனாவைச் சுற்றிவளைப்பதுதான் அமெரிக்காவினதும் அதன் மேற்கத்தைய கூட்டாளிகளினதும் மூலோபாயமாக இருப்பினும், உக்ரேன் சம்பந்தமாக அமெரிக்க – ரஸ்ய நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள 'புதிய பனிப்போர்' அந்த நோக்கத்தில் சற்றுப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக கேந்திர விவகாரங்களுக்கான நிபுணர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**“சீனம் உறங்குகிறது. அது உறங்கட்டும். அது விழிக்கும் போது உலகம் நடுங்கும்”**

(நெப்போலியன் சொன்னதாகக் கூறப்படும் ஒரு கூற்று)

**– சித்தார்த்தன்**

*


படிப்பகம்

www.padippakam.com

# ‘வானவில்’ நோக்கி வந்த கடிதங்கள்

‘வானவில்’ இதழுக்குத் தொடர்ச்சியாகப் பலர் கடிதங்களை அனுப்பி வருகின்றனர். அவை எல்லாவற்றையும் பிரசுரிப்பதற்கு எமது இச்சிறு பத்திரிகையில் இடம் ஒதுக்குவது சிரமமான விடயம். இருந்தாலும் முடியுமானவரை சில தேர்ந்தெடுத்த கடிதங்களை தொடர்ந்து பிரசுரிப்போம். வாசகர்கள் அனுப்பும் கடிதங்கள் எமக்கு பெரும் ஊக்கத்தையும், எம்மை நாமே சீர்தூக்கிப் பார்க்கவும் உதவியாக உள்ளன. கடிதங்களை அனுப்பியவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்தும் ‘வானவில்’ பற்றிய உங்கள் கருத்துகளை எமக்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த இதழில் ‘வானவில்’ இதழுக்கு அண்மையில் கிடைத்த பின்வரும் இரு கடிதங்களைப் பிரசுரித்துள்ளோம்.

**ஆசிரியர் குழு**

## கடிதம் - 1

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை
17.06.2014

அன்பான ஆசிரியர் அவர்களுக்கு,

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் எவ்வளவோ அர்ப்பணிப்புடன் எனது உயர்ந்த சம்பளதையும் விட்டு எனது நகரத்திற்காகச் சேவை செய்வதற்காக வந்த நிலையில் கடந்த 3 வருடங்களாக க.சிவாஜிலிங்கம், தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் கூ.சே.குலநாயகம் தலைமையில் அவர்களாலேயே தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு தமது பதவியைக் கைப்பற்றுவதையே இலக்காகக் கொண்டு என்மீது தொடர்ச்சியாகக் களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர். தமக்கு இருக்கின்ற அரசியல் செல்வாக்கு மற்றும் அடாவடித்தனங்களின் ஊடாக பொய்களைக் கூட உண்மையென நம்ப வைக்கும் நிலையில் தொடர்ச்சியாக ஊடகங்களினூடாகப் பல பொய்யான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். இது தொடர்பாக பல கடிதங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் திரு.மாவை.சோ. சேனாதிராசாவுக்கு எழுதியும், நேரிலும் விளக்கி நகர சபை தொடர்பான பாரபட்சமற்ற விசாரணையை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரியிருந்தபோதும் அவர் எவ்வித நடவடிக்கையும் எடுககாது, தனது விசுவாசியான கூ.சே.குலநாயகத்ததைக் காப்பாற்றும் வகையிலேயே நடந்து வருகின்றார்.

இன்று வடமாகாண சபைக்குப் போய்விட்டாலும் கூட வெளியில் இருந்து திரு.க.சிவாஜிலிங்கமே சபையைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். தயவு செய்து எனது நியாயத்தையும் மக்களுக்குத் தெளிவு படுத்த வேண்டியியிருப்பதால் இத்துடன் உள்ள செய்திக் குறிப்பைப் பிரசுரிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். முடியுமானால் தங்களால் பிரசுரிக்கக் கூடிய ஏனைய ஊடகங்களுக்கும் அனுப்பி இதனைப் பிரசுரிக்கச் செய்யுமாறும் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அன்புடன்,
ந.அனந்தராஜ்
தவிசாளர், வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம

குறிப்பு: இக்கடிதத்துடன் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள் சம்பந்தமான நீண்ட பட்டியல் ஒன்றையும் தவிசாளர் அனுப்பி வைத்துள்ளார். இடமின்மை காரணமாக அதைப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். –ஆசிரியர் குழு

## கடிதம் - 2

முதலில் தங்களுக்கு நன்றி. வானவில் மாதந்த சஞ்சிகையை பி.டி.எவ் ஆக அனுப்பி வசதியாக வாசிப்பதற்கு முடியுமாக இருந்தமைக்கு மீண்டும் நன்றி. பல இதழ்களை வாசிக்க முடியவில்லை. கனடாவில் இருந்து எழுதுவதனால் ஏதேனும் ஒரு பக்கச்சார்பு நிலை இருக்குமோ என சந்தேகம் இருந்தது. அப்படி இல்லாமல் நடுவு நிலமை பேணுகின்றமைக்கு மிகவும் நன்றி.

மேலும் புலம்பெயர் தமிழர்கள்–இந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டின் அரசியல் வாதிகள் மீது கொண்டிருக்கின்ற ஈழ ஆதரவு என்கின்ற ஒரு மாயையை தங்களிடமிருந்து துடைக்கமாட்டார்களா? இது பற்றி நீங்கள் நிறைய எழுதலாமே. குறிப்பாக சீமான் போன்ற வீர வசனம் பேசுகின்ற ஈழத்தமிழனை மதிக்கின்ற போன்றதான பாவனையில் மறைமுகமாக அவர் செய்கின்ற போடிபோக்கான தனங்களை புலம்பெயர்ந்தோர் விளங்காமல் இருப்பது வேதனைக்குரியது.

மிடுக்காக பேசுபவருக்கு மில்லியன்களை அள்ளி வழங்காமல் இருந்தாலே போதுமானது. இது பற்றி அகலமாக பதிவு செய்யுங்கள்.

வானவில் நன்றாக வருகிறது. உங்கள் பணி தொடரட்டும். கல்வி பற்றிய ஆக்கங்கள் தொடராக வந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். ஆக்கங்கள் தேவையெனில் தந்துதவலாம். நன்றி. தொடரலாம்.

எஸ்.இந்திரகுமார்
(ஆசிரியர், அகவிழி)

குறிப்பு: ‘வானவில்’ வாசகர்கள் கல்வி சம்பந்தமாகவோ அல்லது வேறு பயனுள்ள விடயங்கள் சம்பந்தமாகவோ ஆக்கங்களை அனுப்பி வைத்தால், ஆசிரிய குழுவின் பரிசீலனையின் பின்னர் அதைப் பிரசுரிப்போம். – ஆசிரியர் முழு *

www.padippakam.com

# பூமி எதிர்நோக்கி வரும் பெரும் அபாயம்!

பூமியின் தென் துருவத்தில் உள்ள அன்ராக்ரிக்கின் (Antarctic) மேற்குப் பகுதியில் உள்ள பலநூறு றில்லியன் தொன்கள் (Trillion Tons) நிறையுள்ள பனிப்பாறைகள் உருகி வருவதால் அடுத்த சில நூற்றாண்டுகளில் அவை முற்றாக இல்லாமல் போகக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக புவியியல் விஞ்ஞானிகள் புதிய எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். அதன் காரணமாக ஏற்கெனவே உயர்ந்து கொண்டிருக்கும் கடல் மட்டம் மேலும் ஒரு மீட்டர் அளவுக்கு மேல் உயரலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் கைத்தொழில் நாடுகளில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் பசுமை வாயுக்களாலும் (Green Gas), காட்டுத்தீ போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் பூமி வெப்பமடைவதாலேயே வட மற்றும் தென் துருவங்களில் உள்ள பனிச் சிகரங்களும், பனிப்பாறைகளும் வேகமாக உருகி வருகின்றன. இந்தப் பிரச்சினைக்கு விரைவான ஒரு தீர்வு காணப்படாவிட்டால், பூமியின் பெரும் பகுதி நீரில் மூழ்குவதுடன், இயற்கைச் சூழலும் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என



புவியியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பனி முழுவதுமாக உருகுமாக இருந்தால், கடல் மட்டம் 65 மீட்டர்கள் வரை உயரலாம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது!

துருவப் பகுதிகளில் உள்ள பனி உருகுவது மட்டுமின்றி, அன்ரீஸ், அல்ப்ஸ், இமயம் போன்ற உயர்ந்த மலைச் சிகரங்களிலும், அலாஸ்காவிலும் உள்ள பனியும் உருக ஆரம்பித்துள்ளது. ஆனால் இவற்றில் உள்ள பனி உலகின் மொத்தப் பனியில் ஒரு வீதம் மட்டுமே என்பதால், இவற்றால் ஏற்படும் பாதிப்புகளைப் பெரிய அளவில் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

முன்னைய காலங்களில் அதீத பனிப் பொழிவால் உருவான பனி யுகத்தின் (Ice Ages) போது கண்டங்களின் மூன்றிலொரு பகுதி பனியால் மூடப்பட்டதால், முழுப் பூமியுமே உறை குளிர் நிலைக்குப் போய் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. பின்னர் மறுபக்கமாக ஏற்பட்ட கடும் வெப்ப காலத்தின் போது டைனோசர்கள் (Dinosaurs) போன்ற பெரும் விலங்குகள் அழிந்து போயின.

தற்போது பூமியின் 10 வீதமான அளவு பிரதேசத்திலேயே பனி உள்ளது. அதில் ஏறத்தாழ 99 வீதமும் வட, தென் துருவங்களிலும், கிறீன்லாந்திலுமே (Greenland) உள்ளது. கிறீன்லாந்தில் மட்டும் 10 வீதம் பனி உள்ளது. அது உருகினாலே கடல் நீரின் மட்டம் 7 மீட்டர்கள் வரை உயர்ந்து விடும்.

இந்த நிலைமையில் எல்லா நாடுகளும் - குறிப்பாக கைத்தொழில் நாடுகள் - ஒத்துழைத்து பூமி வெப்பமடைவதைத் தடுத்தால் ஒழிய, மனித குலம் பல இலட்சம் ஆண்டுகள் வாழ்ந்து வரும் இந்த மண்ணை அழிவிலிருந்து காப்பாற்றுவது மிகவும் கடினம். ஆனால் இன்னமும் கூட சில முக்கியமான நாடுகள் சுற்றுச்சூழல் சம்பந்தமான கெயேற்றோ உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் இருந்து வருகின்றன.
*

# தமிழகத்தின் இன்றைய வாசிப்பு நிலை!

"கோவை வந்திருந்த தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன், 'பரதேசி' படம் பார்த்துவிட்டு, எனக்குப் பாராட்டுச் சொல்ல வீட்டுக்கு வந்திருந்தார். உரையாடலின் போது கேட்டேன், 'எல்லா தமிழ் தினசரிகளின் சர்க்குலேசன் 15 லட்சம் இருக்குமா?'. அவர் சொன்னார், 'ரொம்பக் குறைச்சுச் சொல்றீங்க நாஞ்சில்...கிட்டத்தட்ட 25 லட்சம் இருக்கும்' என்று. இது 7 1/4 கோடி தமிழர்களுக்கானது.

'மாத்ருபூமி' எனும் மலையாளத் தினசரியின் கோவைக் கிளை மேலாளர், மொழிபெயர்ப்பாளர் விஜயகுமார் குன்னிசேரி என் நண்பர். அவரிடம் கேட்டேன், 'சேட்டா...மலையாள தினசரிகளின் சர்க்குலேசன் எந்தாணு?'. அவர் சொன்னார், 'உத்தேசமா 75 லட்சம் இருக்கும்' என்று. இது 3 3/4 கோடி மலையாளிகளுக்கானது.

....மேலை நாடுகளோடு ஒப்பிடும்போது எப்போதுமே நம்மிடம் வாசிப்பு குறைவு. முன்பெல்லாம் புத்தகத்தின் ஒரு பதிப்பு என்பது 1,200 படிகள். இன்று மக்கள் தொகை இருமடங்கு, மும்மடங்கு பெருகிய பின் சிறுகதை, நாவல் எனில் 500 படிகள், கவிதை எனில் 250 படிகள். இது ஒரு அளவுகோல். ஊரக நூலகங்களைப் பயன்படுத்துவோர் தொகை அபாயகரமான வேகத்தோடு கீழிறங்கி வருகிறது".

தமிழகத்தின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எழுத்தாளர்களில் ஒருவரான நாஞ்சில் நாடன் சமீபத்தில் 'ஆனந்த விகடன்' வார இதழுக்கு அளித்த பேட்டியொன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். *


## துளிகள்

இந்தியாவை ஆட்சி செய்த அரசுகளின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால், வறுமையைத் தாங்க முடியாமலும், கடன் சுமையாலும் இதுவரை இரண்டே முக்கால் இலட்சம் இந்திய விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்! இத்தகவலை இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் 'கல்கி' வார இதழுக்கு அளித்த ஒரு பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

# ரொம்மி டக்ளசின் கொந்தளிப்பான உலகம்




**த**னது குழந்தைப் பருவத்தில் தனக்கு ஏற்பட்ட நோய்களுக்கு வறுமை காரணமாக மருத்துவ சிகிச்சை பெற முடியாமல் போனதன் தாக்கமே அந்த மனிதனை கனடாவின் மருத்துவ அமைப்பின் தந்தையாகக் கொண்டு வருவதில் பெரும் செல்வாக்கு செலுத்தியது. ரொம்மி டக்ளஸ் (Tommy Douglas) ஸ்கொட்லாந்தின் ஃபோல்கேர்க்கில் (Scotland – Falkirk) உள்ள ஒரு தொழிலாளி வர்க்கக் குடும்பத்தில் 1904 ஒக்ரோபர் 20இல் பிறந்தார். அவர் சிறுவனாக இருந்தபோது தவறுதலாக ஒரு கல்லின் மேல் விழுந்ததால், அவரது வலது முழுங்காலில் காயமேற்பட்டு அதனால் தொற்று ஏற்பட்டு, முழங்கால் வீங்கி (Osteomyelitis) என்ற நோய் ஏற்பட்டது. அவரது தயாரினதும் பாட்டியினதும் உதவியுடன் அவர்கள் வீட்டு சமையல் அறை மேசையில் வைத்து வைத்தியர் அவருக்கு குளோரோபோம் கொடுத்து மூன்று வெற்றிபெறாத சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டார்.

அவருக்கு 6 வயதாகும் போது அவரது குடும்பம் (கனடாவின்) வின்னிபெக்கிற்கு (Winnipeg) இடம் பெயர்ந்தது. அங்கு அவரது நோய்த் தொற்றுக்கு நீண்ட காலம் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற வேண்டி நேர்ந்ததால், அவரது கல்வி அடிக்கடி பாதிப்புக்குள்ளானது.

1914இல் அவரது காலை இழக்கவேண்டி இருந்த சூழலில் புகழ்மிக்க எலும்பு முறிவு (Orthopedic) சத்திர சிகிச்சை நிபுணரினால் அதை நிவர்த்தி செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. வைத்தியர் ஜே.ஆர்.சிமித் (Dr.J.R.Smith) தனது வைத்திய மாணவர்கள் சத்திர சிகிச்சையை நேரடியாக அவதானிப்பதற்கு அனுமதித்தால் தான் டக்ளசிற்கு இலவசமாக சிகிச்சை அளிப்பதாக ஒரு பேரத்தை முன்வைத்தார். டக்ளசின் பெற்றோர்கள் பணம் கொடுத்து ஒருபோதும் வைத்தியர் சிமித்தின் சேவையைப் பெற்றிருக்க முடியாது என்றபடியால், தனது காலைப் பாதுகாத்த வைத்தியர் மீது எப்போதும் நன்றியுடையவராகவே இருந்துள்ளார். ஏனெனில் அவரது பெற்றோர்களின் அன்றைய பொருளாதார நிலையில் என்றுமே தொகையான பணம் கொடுத்து டாக்டர் சிமித்தின் சேவையைப் பெற்றிருக்க முடியாது.

பின்னர் அவர் இதுபற்றிக் கூறுகையில், “எனது இவ்வாறான சொந்த அனுபவத்தினால் எவருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மருத்துவ சேவைக்குப் பணம் அறவிடக்கூடாது என கருதினேன். அது என்றுமே இலவசமாக வழங்கப்பட வேண்டும். மக்களுக்கு என்ன வைத்திய வசதி தேவையோ, அது அவர்களுக்கு முற்றாக இலவசமாக வழங்கப்பட வேண்டும். அதை அவர்களுக்கு வழங்குவதற்கு அவர்களது பொருளாதார நிலை ஒரு காரணமாக இருக்கக்கூடாது” எனக் குறிப்பிட்டார்.

அவரது குடும்பத்தில் நிலவிய உயிரோட்டமான சூழல், சுதந்திரமான சிந்தனைக்கும் அரசியல் விவாதங்களுக்கும் ஊக்குவிப்பு அளித்ததுடன், அவரை ஒரு பப்பிஸ்ற் மதகுருவாக (Baptist Pastor) மாறவும், சமூக மாற்றத்துக்கான செயல்களில் ஈடுபடவும் செய்தது.

மாபெரும் பொருளாதார மந்த நிலை (Great Depression) ஏற்பட்ட காலத்தில் அவர் ஒரு மத குருவாக சஸ்கற்சேவான் (Saskatchewan) மாகாணத்தின் கிராமப்புறங்களில் வேலை செய்த காலத்தில் இதயத்தை நொருங்க வைக்கும் வறுமையின் ஒரு சாட்சியாக அவர் இருந்தார். “ஒரு பெண்ணின் கணவன் அவருக்கு வேண்டிய வைத்திய வசதி இல்லாமல் இறந்து போன சூழ்நிலையில் துன்ப நிலைக்கு முகம் கொடுக்கும் அந்தப் பெண்ணின் உதவிக் கோரிக்கைக்கு என்ன பதிலளிக்க முடியும்?” என அவர் கேட்டார்.

இத்தகைய அனுபவங்கள் டக்ளஸை உணர்ச்சி வசப்பட்ட வாக்கு வல்லமையுள்ள ஒருவராக அரசியலில் பிரவேசிக்க வைத்தது. 1936இல் கனடிய பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட அவர், பின்னர் சஸகற்ஸ்சேவான் திரும்பி கூட்டுறவு பொதுநலவாய சம்மேளனத்தை – இதுதான் கனடிய புதிய ஜனநாயகக் கட்சியின் (New Democratic Party) முன்னோடி – வழி நடாத்தியதுடன் அதன் மாகாணம் தழுவிய வெற்றிக்கும் வழிவகுத்தார். 1961 வரை அம்மாகாணத்தின் பிரதமராகப் பதவி வகித்த போது பொது மருத்து வசதிகளுக்கு (Universal Meicare) அத்திபாரம் இட்டதுடன், சமூக – பொருளாதார சீர்திருத்தங்களை இலக்காகக் கொண்டு பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக ஒட்டாவா (பாராளுமன்றத்திற்கு) திரும்பிய அவர் ஒருபோதும் கனடாவின் பிரதம மந்திரியாக வராதபோதும், லெஸ்ரர் பி.பியர்சன் (Lester B.Pearson) அவர்களின் சிறுபான்மை அரசாங்கங்கள் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு தூண்டுகோலாகச் செல்வாக்குச் செலுத்தினார்.

1978இல் பாராளுமன்றத்திலிருந்து ஓய்வுபெற்ற டக்ளஸ் 1986இல் தமது 81ஆவது வயதில் காலமானார்.

- **நெல் ஒஸ்ரறொம்**
(Nelle Oosterom)

நன்றி: **Canada's History**
***தமிழில்: தவம்***

16ம் பக்கத்தொடர்ச்சி…

தமிழ் மக்களுக்கும், நாட்டுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்துவது அவசியம்.

ஆனால் இவை எதையும் சொல்ல முடியாமல், அதேநேரத்தில் புதிதாக எதுவும் கைவசம் இல்லாமலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தடுமாறுவதைத்தான், பிரேமச்சந்திரனின் ‘தமிழ் மக்களிடம் அபிப்பிராயம் கேட்டு தீர்வத் திட்டமொன்றை உருவாக்கப் போகிறோம்’ என்ற கூற்று எடுத்தியம்புகின்றது என்பதில் சந்தேகம் இல்லை. அதாவது எந்தவொரு கொள்கையும் இல்லாமல் தமிழ் மக்களை ஏமாற்றித் தேர்தல்களில் கூட்டமைப்பினர் வென்று வருகிறார்கள் என்பதே உண்மை.

இதில் மோசடிக்காரர்களான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஏனெனில் ஆண்டாண்டு காலமாக அது அவர்களது தொழில். தமது ‘தொழில் தர்மத்தை’ விட்டு அவர்கள் ஒருபோதும் விலகமாட்டார்கள். ஆனால் அவர்களுக்கு வாக்களித்து அரியாசனத்தில் ஏற்றுகின்ற கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்து வருகின்ற தமிழ் பொதுமக்கள்தான் இந்த இடத்தில் குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்க வேண்டியவர்களாக மாறியிருக்கிறார்கள். எனவே அவர்கள்தான் தமது நிலையை ஒருமுறை திரும்பிப் பார்ப்பது அவசியம்.*

www.padippakam.com

முன்பக்கத்தொடர்ச்சி...

போன்ற தீவிர சிங்கள இனவாத சக்திகளும் இடம்பெறத் தொடங்கின. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வந்து அரசில் இணைந்து கொண்டவர்கள் காரணமாக, சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் வலதுசாரிகளினதும், இனவாதிகளினதும் பலமும் அதிகரித்தது.

இருந்தும் இடதுசாரிகள் மட்டுமின்றி, அரசில் இணைந்துள்ள சிங்கள இனவாத சக்திகளும் கூட ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருப்பதால்தான், (இது தமிழ் இனவாத சக்திகளுக்கும் சிங்கள இனவாத சக்திகளுக்கும் இடையிலான ஒரு அடிப்படை வித்தியாசம். தமிழ் இனவாத சக்திகளின் எல்லாப் பிரிவுகளுமே எப்பொழுதுமே ஏகாதிபத்திய விசுவாசிகளாக இருந்து வருகின்றனர்) சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளை ஏகாதிபத்திய சக்திகள் தொடர்ந்து எதிர்த்து வருகின்றன.

அதிலும் தற்போதைய மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு எப்பொழுது ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கைக்குரிய கைக்கூலிகளான புலிகளை ஒழித்துக் கட்டியதோ, அன்றிலிருந்து ஏகாதிபத்திய சக்திகளும், உள்ளூரிலுள்ள ஏகாதிபத்திய சார்பு தமிழ் – சிங்கள பிற்போக்கு, இனவாத சக்திகளும் ஒரே வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்துவிட்டன.

இந்த தேசவிரோதக் கூட்டில் ஐ.தே.க, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சரத் பொன்சேகாவின் கட்சி, மனோ கணேசன் குழு என்பன இணைந்துள்ளன. இவர்கள் எதிரும் புதிருமாக இனவாதம் பேசினாலும், ஏகாதிபத்திய விசுவாசத்திலும், இன்றைய ஏகாதிபத்திய விரோத இலங்கை அரசாங்கத்தை அகற்றுவதிலும் ஒத்த நோக்குடன் செயற்படுகின்றன. ஜே.வி.பி தன்னை ஏகாதிபத்திய விரோத, சோசலிச கட்சி என்று சொல்லிக் கொண்டாலும், அதன் இனவாதப் போக்கும், அரச எதிர்ப்புச் செயற்பாடுகளும் ஐ.தே.க தலைமையிலான தேச விரோத சக்திகளுக்கு உறுதுணையாகவே இருக்கின்றது.

இந்த சக்திகளின் இன்றைய ஒரே நோக்கம் இலங்கையில் தற்போது இருக்கின்ற ஏகாதிபத்திய விரோத அரசாங்கத்தை எப்படியாவது தூக்கி எறிய வேண்டும் என்பதே. இதற்காகவே உள்நாட்டில் ஐ.தே.கவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தீவிரமாகச் செயற்படுகின்றன. அதேபோல சர்வதேச அரங்கில் மீதமிச்சமுள்ள புலிகளும், உருத்திரகுமாரனின் 'நாடு கடந்த தமிழீழ அரசாங்க'மும், ஏகாதிபத்திய சக்திகளும் கைகோர்த்துச் செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவர்களுடன் தமிழகத்தில் உள்ள இனவாத — பிழைப்புவாதக் குழுக்களும் ஒன்றிணைந்துள்ளன.

அதேநேரத்தில், இந்த ஆட்சி மாற்றத்துக்கான நம்பிக்கையை இந்தப் பிற்போக்கு சக்திகளிடம் விதைத்ததில் கணிசமான அளவுக்கு மகிந்த அரசாங்கத்தின் பங்கும் உள்ளது. இந்த அரசு யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களாகியும் இனப் பிரச்சினைக்கான தீர்வை இழுத்தடித்து வருவது, ஜே.ஆரின் 1978ஆம் ஆண்டு மக்கள் விரோத அரசியலமைப்பை தொடர்ந்து வைத்துக்கொண்டு இருப்பது, ஆயுதப் படைகளின் அத்துமீறல்களை சரியான முறையில் விசாரித்து குற்றமிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதில் அசமந்தமாக இருப்பது, நிர்வாகச் சீர்கேடுகள் – ஊழல்களைக் களைவதில் அக்கறையற்று இருப்பது, ஜனநாயக மற்றும் ஊடக சுதந்திரங்களை மட்டுப்படுத்த முனைவது போன்ற காரணங்களால், பிற்போக்கு சக்திகள் உற்சாகமும் நம்பிக்கையும் அடைந்துள்ளன.

மறுபக்கத்தில், அண்மையில் நடந்து முடிந்த தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியின் வாக்கு வீதம் 10 வீதத்தால் குறைவடைந்திருப்பதானது, ஏதோ ஒரு வகையில் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டிருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. அதுமாத்திரமின்றி, இதுவரைகாலமும் ஏகாதிபத்தியத்திற்கும், அதன் உள்ளூர் அடிவருடிகளான ஐ.தே.க — தமிழ் பிற்போக்கு சக்திகள் என்பனவுக்கும் எதிராக உறுதியுடன் இருந்து வந்த இடதுசாரி — ஜனநாயக சக்திகளின் ஒரு பிரிவினரும் அரசு மீது அதிருப்தி கொண்டுள்ளதைக் காணமுடிகிறது.

இவையெல்லாம் நல்ல அறிகுறிகள் அல்ல. எனவே அரசு தனது தவறுகள் என்ன என்பதை ஆராய்ந்து அவற்றைத் திருத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. குறிப்பாக அரசு மீது மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதானால், அரசுக்குள் உள்ள இனவாத சக்திகளையும், மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கும் அதிகார வர்க்கத்தையும் ஓரம்கட்டி வைக்க வேண்டும். பிரதானமாக தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும்.

எப்படிப் பார்த்தாலும், இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இரண்டு கட்சிகளே மாறிமாறி ஆட்சிக்கு வந்துள்ளன. அதில் ஒன்று ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமான, மக்கள் விரோத, இனவாத ஐ.தே.க தலைமையிலான அரசுகள். மற்றது சிறீல்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசபக்த, முற்போக்கு சக்திகளின் அரசுகள். இன்றும் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில்தான் போராட்டம் நடைபெறுகின்றது. ஒரு சரியான இடதுசாரி அணி பலமாக கட்டியெழுப்பப்படாத வரையில், இந்த இரண்டு சக்திகளுக்குமிடையில்தான் போராட்டம் என்பதுதான் யதார்த்தமாக உள்ளது.

இதில் ஏகாதிபத்திய சார்பு அணி எமக்கென உள்ள சுவரையே (நாட்டை ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தாரைவார்த்து) அழிக்க முயல்கிறது. இன்று ஆட்சியில் இருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி அழகான சித்திரத்தைக் கொண்டிருக்காவிட்டாலும், எமக்கென உள்ள சுவரைப் பாதுகாக்க முயற்சிக்கின்றது. இதில் எமக்குச் சுவர் தேவையென்பதுதான் மிக முக்கியமானது. அப்பொழுதுதான் நமக்கு விருப்பமான சித்திரத்தைத் தீட்ட முடியும். இந்த உண்மையை அனைத்து தேசபக்த — ஜனநாயக — முற்போக்கு சக்திகளும் புரிந்து கொண்டு, ஆட்சி மாற்றம் என்ற ஏகாதிபத்திய மற்றும் பிற்போக்குச் சக்திகளின் சதியை முறியடிக்க கங்கணம் கட்ட வேண்டும்.

### ஜனநாயகத்துக்கான போராட்டமும் சோசலிசமும்

"ஜனநாயகத்துக்கான போராட்டம் சோசலிசப் புரட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைத் திசை திருப்பவும் அல்லது அப்புரட்சியை மறைத்து மங்கச் செய்யவும் திறமை வாய்ந்தது எனக் கருதுவது அடிப்படைத் தவறாகும். அதற்கு மாறாக, வெற்றி பெற்ற சோசலிசம் முழுமையான ஜனநாயகத்தைச் செயற்படுத்தாமல் எப்படி இருக்க முடியாதோ, அதேபோல ஜனநாயகத்துக்காக எல்லா முனைகளிலும், முரண்பாடுகளின்றி, புரட்சிகரப் போராட்டம் நடத்தாமல் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் மீது வெற்றி கொள்ளத் தன்னைத் தயார் செய்துகொள்ள முடியாது"
**–லெனின்** (சோசலிசப் புரட்சியும் ஜனநாயத்துக்கான போராட்டமும் என்ற கட்டுரையில்) *


படிப்பகம்

www.padippakam.com



# சுரேஸ் பிரேமச்சந்திரன் போட்டுடைத்த உண்மை!

அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எனத் தன்னை வர்ணித்துக் கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டு தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

பிரேமச்சந்திரன் விட்ட இந்தப் புதிய 'வாணம்' குறித்து தமிழ் அரசியல் வட்டாரங்களோ அல்லது தமிழ்ப் பொதுமக்களோ 'அலட்டி'க் கொண்டதாகவோ, அக்கறை செலுத்தியதாகவோ தெரியவில்லை. குறைந்த பட்சம் அவரது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்கள் கூட இதுபற்றி எதுவும் கருத்துக் கூறியதாக இல்லை.

அதற்குக் காரணம் பிரேமச்சந்திரன் வழமையாக இத்தகைய வெற்று வேட்டுகளை ஊடகங்களுக்கு விடுத்து வருபவர் என்ற அலட்சியம் ஒருகாரணமாக இருக்கலாம். அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இப்படியான ஒரு தீர்மானம் எடுக்காத நிலையில் தேவையில்லாமல் இதுபற்றி அபிப்பிராயம் கூறி ஏன் வீணாக மூக்கை உடைத்துக் கொள்ளுவான் என்ற காரணமாயும் இருக்கலாம்.

இருப்பினும் பிரேமச்சந்திரனின் கூற்று ஒரு உண்மையைப் போட்டு உடைத்திருக்கிறது. அதாவது அவரின் கூற்றின்படி, தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக தற்பொழுது தீர்வுத் திட்டம் எதுவும் இல்லை என்ற உண்மையை அவர் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். அது கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விடயம்.

இலங்கைத் தமிழரின் வரலாற்றில் நாடு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் அடைந்த காலம் முதல் பாராளுமன்றவாத அடிப்படையில் செயற்பட்ட பல தமிழ் கட்சிகள் வந்து போயிருக்கின்றன

முதலில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உருவானது. அது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை முன்வைத்தது. 70 வீதம் சிங்கள மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் அது கொஞ்சம் கூட நடைமுறைச்சாத்தியம் இல்லாததால், அது வந்த வழியாலேயே திரும்பிப் போய்விட்டது.

அதன் பின்னர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சி உருவானது. அது தனது கொள்கையாக சமஸ்டி தீர்வை முன்வைத்தது. அக்கட்சி எதிர்பார்த்த அளவுக்கு இல்லாவிட்டாலும், தமிழரசுக் கட்சி எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் அரசாங்கத்துடன் செய்து கொண்ட "பண்டா — செல்வா ஒப்பந்தம்" ஓரளவுக்கு சமஸ்டி அடிப்படையைக் கொண்டிருந்தது. ஆனால் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவிடாமல் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான சிங்கள இனவாத சக்திகள் கிளர்ச்சி செய்ததால், அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

அதன் பின்னர் தமிழரசு — தமிழ் காங்கிரஸ் - தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - ஐ.தே.கவைச் சேர்ந்த கே.டபிள்யூ.தேவநாயகம் ஆகியோர் சேர்ந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (தமிழர் விடுதலைக் கூட்டணி) என்ற அமைப்பை உருவாக்கினர். அந்த முன்னணி 1976இல் வட்டுக்கோட்டையில் ஒரு மாநாட்டைக் கூட்டி தமிழர் பிரச்சினைக்கு 'தமிழீழம்' என்ற தனிநாடுதான் தீர்வு எனத் தீர்மானித்தது. அந்தக் கொள்கையை ஒத்துக் கொள்ளாத தொண்டமானும், தேவநாயகமும் அதிலிருந்த விலகிச் சென்றனர்.

அந்தக் கொள்கையின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலிருந்த 18 தேர்தல் தொகுதிகளிலும் 1977 தேர்தலில் அமோக வெற்றி பெற்றது. ஆனால் தனிநாட்டுக் கொள்கைக்காகப் போராடாமல் அன்றைய ஜே.ஆர்.அரசாங்கத்துடன் கூடிக்குலாவ ஆரம்பித்தது. அதனால் கூட்டணி மீது நம்பிக்கை இழந்த தமிழ் இளைஞர்கள் தனிநாட்டுக் இலட்சியத்துக்காக பல்வேறு ஆயுதக் குழுக்களை அமைத்து போராட ஆரம்பித்தனர்.

இளைஞர் இயக்கங்களின் ஆயுதப் போராட்டத்தை ஜே.ஆரின் அரசு இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க இருந்த தருணத்தில் இந்திய அரசு தலையீட்டு 'இந்திய - இலங்கை ஒப்பந்தம்' மூலம் ஐக்கிய இலங்கைக்குள் மாகாணசபைகள் மூலம் அதிகாரத்தைப் பகிரும் ஏற்பாட்டுக்கு வழிவகுத்தது. விடுதலைப் புலிகள் தவிர ஏனைய இயக்கங்கள் அனைத்தும் மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொண்டு ஜனநாயக நீரோட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டன.

தொடர்ந்தும் தனிநாடு ஒன்றை அமைப்பதற்காப் போராடிய புலிகளை வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரிக்க மறுத்தது. அதன் காரணமாக தமக்கு பாராளுமன்றத்திலும் ஒரு முகம் வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு. அவ்வாறு உருவான தமிழ் கூட்டமைப்பு "புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்" என்று பிரகடனம் செய்ததின் மூலம், புலிகளின் தனிநாட்டுக்கான போராட்டத்தைத் தாம் அங்கீகரிப்பதாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

2009 மே மாதத்துடன் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டார்கள். அதன் பின்னரும் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற, மாகாண, உள்ளூராட்சித் தேர்தல்களில் ஈடுபட்டு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று வெற்றிபெற்று வருகிறார்கள். ஆனால் இந்தத் தேர்தல்களின் போது "தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறோம்" என மொட்டையாகச் சொல்கிறார்களே தவிர, அது என்ன வகையான தீர்வு எனச் சொல்லுவதில்லை.

தமிழர்களின் முதல் அரசியல் கட்சியான தமிழ் காங்கிரசிலிருந்து, பின்னர் உருவான ஆயுதப் போராட்ட இயக்கங்கள் வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கை என்ன என்பதை கட்டாயமாக வெளிப்படுத்தியே ஆக வேண்டும். அதாவது ஐம்பதுக்கு ஐம்பதா, சமஸ்டியா, தனித்தமிழ் நாடா அல்லது வேறு ஏதாவது ஒன்றா என்பதை அவர்கள்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..


படிப்பகம்